## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.05.2019 தொழிலாளரான புனித யோசேப்பு - திருப்பலி 02
03.05.2019 புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு - திருப்பலி 03
05.05.2019 உயிர்ப்புக் காலம் மூன்றாம் ஞாயிறு- திருப்பலி 04
06.05.2019 புனித தோமினிக் சாவியோ - திருப்பலி 05
12.05.2019 உயிர்ப்புக் காலம் நான்காம் ஞாயிறு - திருப்பலி 06
13.05.2019 புனித மரிய மசரெல்லோ - திருப்பலி 07
14.05.2019 புனித மத்தியாஸ் - திருப்பலி 08
16.05.2019 புனித லூயிஸ் ஓரியோனே - திருப்பலி 10
18.05.2019 புனித லெயனார்து முரியால்தோ - திருப்பலி 11
19.05.2019 உயிர்ப்புக் காலம் ஐந்தாம் ஞாயிறு - திருப்பலி 12
22.05.2019 கசியா நகர் புனித ரீத்தா - திருப்பலி 13
24.05.2019 கிறிஸ்தவர்களின் சகாய அன்னை: சலேசிய சபையின் பாதுகாவலி - திருப்பலி 15
26.05.2019 உயிர்ப்புக் காலம் ஆறாம் ஞாயிறு - திருப்பலி 16
31.05.2019 புனித கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்தல் - திருப்பலி 17


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. புனித தோமினிக் சாவியோவின் வாழ்வு - தரும் பாடம் 18
2. புனித மரிய டோமினிக்கா மசரெல்லோ - கடந்து வந்த பாதை 20
3. விடுமுறை விவிலியப் பள்ளி - ஒரு கண்ணோட்டம் 22
4. திருச்சபைச் செய்திகள் 26

# பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.05.2019 தொழிலாளரான புனித யோசேப்பு விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

உழைக்கும் மக்களே, இன்று நாம் தொழிலாளரான புனித யோசேப்பின் விழாவைக் கொண்டாடுகிறோம். அரை நூற்றாண்டுக்கு முன்பு உலகம் கம்யூனிசத்தின் வன்கரத்தில் சிக்கியிருந்த வேளையில், கிறிஸ்தவத் தொழிலாளர்கள் அனைவரும் விசுவாசத்தில் தளர்ச்சி அடைந்திருந்தார்கள். அத்தகையச் சூழலில் தொழிலாளர்களுக்குச் சிறந்த முன்மாதிரியை வழங்க, திருத்தந்தை 12ம் பத்திநாதர் விரும்பினார். அதன் விளைவாக தொழிலாளர் தினத்தைக் கொண்டாடும் வகையில், 1955ஆம் ஆண்டு அவர் இந்த விழாவை உருவாக்கினார். மனிதராகப் பிறந்த இறைமகன் இயேசுவையும், அவரது தாய் மரியாவையும் தமது உழைப்பால் பாதுகாத்தவர் புனித யோசேப்பு. கடவுள்மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையே, திருக்குடும்பத்தின் தலைவராக அவரை உயர்த்தியது. தச்சுத் தொழிலில் கிடைத்த வருவாய் வழியாக திருக்குடும்பத்துக்கு உணவளித்த அவர், இயேசு கிறிஸ்துவையும் ஒரு தச்சராக உருவாக்கினார் என்று நற்செய்திகள் கூறுகின்றன. நேர்மையாளரான புனித யோசேப்பைப் பின்பற்றி, நமது வாழ்வில் நேர்மையைக் கடைபிடித்து உழைக்கும் வரம் வேண்டி இத்திருப்பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. படைப்பின் பரம்பொருளே இறைவா, உமது திருமகன் இயேசு விரும்பிய நேர்மையான உலகத்தைப் படைக்கும் பணியை, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் சிறப்பாக நிறைவேற்ற உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. மக்களின் தலைவரே இறைவா, எம் நாட்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், உழைக்கும் மக்களின் வளர்ச்சியில் அக்கறையுள்ள மக்கள் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உணவளித்துக் காப்பவரே இறைவா, உலகின் பல பகுதிகளில் வறட்சி, வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளைக் கனிவுடன் கண்ணோக்கி, அவர்கள் வாழ்வு செழிக்க நல்ல மழையினைப் பொழிந்து விவசாயம் செழித்து வளர உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. நேர்மையின் உறைவிடமே இறைவா, உழைக்கும் தொழிலாளர்கள் அனைவரும் உமது பராமரிப்பில் நம்பிக்கைக் கொண்டு, புனித யோசேப்பைப் போன்று தங்கள் வேலையை நேரிய உள்ளத்தோடு தொடர்ந்தாற்ற உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 03.05.2019 புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு திருப்பலி

### முன்னுரை

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவில் அன்புமிக்க சகோதரிகளே, சகோதரர்களே, இன்று திருஅவையானது திருத்தூதர்கள் பிலிப்பு மற்றும் யாக்கோபு ஆகியோரின் திருவிழாக் கொண்டாட்டத்திற்கு நம்மை அழைக்கிறது. திருத்தூதர் பிலிப்பு பெத்சாயிதா என்னும் ஊரில் வாழ்ந்து வந்தவர். ஒருநாள் இயேசு கலிலேயாவுக்குச் செல்ல விரும்பினார். அப்போது அவர் பிலிப்பைக் கண்டு, "என்னைப்பின் தொடர்ந்து வா" எனக்கூறினார் (யோவா 1:43). பின்பு பிலிப்பு இயேசுவின் சீடராக மாறினார். இவர் இயேசுவின்மீது கொண்ட அளவில்லா நம்பிக்கையின் பொருட்டு சிலுவையில் கட்டிப்போடப்பட்டு கல்லால் எறிந்துக் கொலைச் செய்யப்பட்டு 87 வயதில் இறந்தார். இவர் உணவு விடுதி வைத்திருப்பவர்களுக்குப் பாதுகாவலர்.

அல்பேயுவின் மகனான திருத்தூதர் யோக்கோபுவை வேறு ஒரு திருத்தூதரிடமிருந்து வேறுப்படுத்திக் காட்டுவதற்காகச் சின்ன யாகப்பர் என்று அழைப்பதுண்டு. இந்தப் புனிதர் அடிக்கடி முழங்கால் படியிட்டு செபித்து வந்ததால் அவருடைய இரண்டு முழங்கால்களும் மரத்துப்போய் இருந்தன. முகம் குப்புறத்தரையில் விழுந்து செபித்து வந்ததன் காரணமாக இவரது நெற்றியில் எப்போதும் தழும்புகள் காணப்பட்டன. இந்த திருத்தூதர் கி.பி. 59ம் ஆண்டில் திருமுகம் ஒன்றை எழுதியுள்ளார். நம்பிக்கையானது செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும் என்றும், செயலுடன் கூடிய நம்பிக்கை தேவையென்றும் (யாக். 2:17)ல் வலியுறுத்திக் கூறியுள்ளார். எருசலேம் தேவாலயத்தின் உச்சியிலிருந்து தள்ளிவிடப்பட்டும், கல்லால் எறிந்தும் சாகாமல் இருந்த திருத்தூதரின் தலையில் ஒரு கொடியவன் தடியால் ஓங்கி அடிக்க இவர் உயிர் துறந்தார். இவர் மருந்தகப் பணியாளர், இறக்கும் நிலையில் இருப்போர், கம்பளி செய்வோர் ஆகியோருக்குப் பாதுகாவலர். இப்புனிதர்களின் முன்மாதிரியை நமது விசுவாசத்தின் ஊன்றுகோலாகக் கொண்டு, புனித வாழ்வு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. மகிமையின் ஒளியே இறைவா, எம் திருஅவைத் தலைவர்கள் உமது இறையாட்சிப் பணியை உணர்ந்து, இறைவனின் மன்னிப்பையும், அன்பையும், இரக்கத்தையும் மக்களுக்கு வெளிப்படுத்தி, அவர்களுக்கு உமது தூய ஆவியாரின் வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் இறைவா, எங்களை வழிநடத்துபவர்கள் திருத்தூதர் யாக்கோபின் வழியில் செயல் வடிவம் பெற்ற நம்பிக்கையை எம் மக்கள்மேல் வெளிப்படுத்த வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. வெற்றியைத் தரும் விண்ணகக் கடவுளே, படித்த எம் இளையோருக்கு நல்லதொரு வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்து, அவர்களுக்கு நல்ல எதிர்காலமும், திருமண வாழ்வும், குழந்தை வரமும் அளித்து வாழ்வில் வெற்றிக்காண அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 05.05.2019 உயிர்ப்புக் காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. திப. 5: 27-32 40-41 II. திவெ. 5: 11-14 யோவா 21: 1-19

இன்றைய வாசகங்களில் இயேசுவின் உயிர்ப்புக்குப் பின், யூத தலைவர்கள் சீடர்களிடம் இயேசுவைப்பற்றிக் கற்பிக்கக் கூடாது என்று எவ்வளவு தான் கண்டித்தாலும், அவமதிப்புக்கு உள்ளாக்கினாலும், சீடர்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிவதுதான் சாலச்சிறந்தது என்று கண்டு, தூய ஆவியாரின் அருள்பெற்று தொடர்ந்து கோயில்களிலும், வீடுகளிலும் இயேசுவைப்பற்றிக் கற்பித்து வந்தார்கள். கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டி மகிமையோடும் மாட்சிமையோடும் ஆண்டவரின் வலப்பக்கம் அமர்ந்திருந்த காட்சியைக் கண்டு, விண்ணுலகு, மண்ணுலகு, கீழுலகு, மேலுலகு, கடல் எங்கும், எங்குமிருந்த படைப்புகள் அனைத்தும் வானத் தூதர்கள், மூப்பர்கள் என்று அனைவரும் ஆண்டவரின் பெருமையைப் பாடி வாழ்த்தினர். உயிர்த்த இயேசுவின் உன்னதமான மகிமைச் செயலைக் கண்ட சீடர்களைத் தேடி கடவுள் வருகிறார், அவர்களோடு தானே உணவு சமைத்து, தோழமையோடும், அன்போடும் உணவருந்துகிறார் நம் இயேசு. சீமோனிடம் உரிமையோடும், வாஞ்சையோடும் மும்முறை தன்னிடம் அன்பு உள்ளதா என்று வினவுகிறார். சீடர்களுக்கு இன்னும் உற்சாகத்துடன் பணிசெய்ய அன்பு கட்டளையிடுகிறார். தொடர்ந்து பணிசெய்ய சீமோனை ஆயனாக்குகிறார் "என் ஆடுகளைப் பேணி வளர்க்க" என்று உறுதியுடன் கூறுகிறார். சீமோன் தனக்கு பிற்காலத்தில் எவ்வாறு சாட்சியாகப் போகிறார் என்றுச் சுட்டிக்காட்டுகின்றார். எனவே தினமும் அவரின் தியாகத் திருப்பலியைக் கண்டு, அவரையே உணவாகப் பெற்று, அவர் பணித்த மேய்ப்புப் பணியைச் செய்ய ஆவல் கொண்டு இத்திருப்பலியில் அன்போடு இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. என்றென்றும்வாழும்இறைவா,திருஅவையைவழிநடத்தும்திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் எவ்வித எதிர்ப்பார்ப்புமின்றி, உயிர்த்த இயேசுவின் அன்பு கட்டளையைப் பின்பற்றிச் செயலாற்ற நல்ல உள்ளத்தை அருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. மீட்பின் வள்ளலே இறைவா, தூய அன்னையின் மடிதவழ்ந்து, தந்தை சூசையின் அரவணைப்பில் வளர்ந்து பின் வானகத் தந்தையின் கட்டளைப்படி போதித்துச், சிலுவை மரணத்திற்கு ஆளாகி,

மாட்சிமையுடன் உயிர்த்து தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கும் உம்மை வானவர்களோடு சேர்ந்து நாங்களும் என்றென்றும் புகழ்ச்சிப் பண்பாட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. தியாகத்தின் ஊற்றே இறைவா, எத்தகுத் துன்பம் வந்தாலும், இறைவனின் சித்தத்திற்குக் (திருவுளத்திற்கு) கீழ்ப்படிந்து உயிர்த்து மாட்சிமைப் பெற்ற உம்மைப் பின்பற்றி, உலகத் துன்பங்களைப் பொறுமையுடன் ஏற்று, தூயதொரு மேலுலக வாழ்வைப் பெற வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. பாதுகாப்பின் இறைவா, தட்ப வெப்ப மாற்றத்தின் காரணமாக ஏற்படும், வறட்சி, தண்ணீர் பஞ்சம், உடல்நலக் குறைவு இவைகளினால் அவதியுறும் மக்களுக்கு நல்ல மழையைத் தந்து நீர்நிலைகள் பெருகி விவசாயம் செழித்தோங்க வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 06.05.2019 புனித தோமினிக் சாவியோ திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலிப் புத்தகம்

புனித தோமினிக் சாவியோ 1842ம் ஆண்டு இத்தாலி நாட்டிலுள்ள "கியேரி" என்னும் நகருக்கருகில் "ரீவா" என்னும் கிராமத்தில் பிறந்தார். 1849ம் ஆண்டு தனது ஏழாம் வயதில் புதுநன்மை வாங்கியபோது தனது வாழ்வின் இலட்சியங்களாக "எனது ஆன்ம குருவின் அனுமதியின்பேரில் நான் ஒப்புரவு அருட்சாதனத்தையும், நற்கருணையையும் அடிக்கடி பெறுவேன். ஞாயிற்றுக்கிழமைகளையும், திருவிழாக்களையும் புனித மிக்க நாட்களாக நான் கடைப்பிடிப்பேன். இயேசுவும் மரியன்னையும் எனது நண்பர்கள் "பாவம் செய்வதைவிட சாவேன்" என்பனவற்றைத் தேர்ந்துக்கொண்டார். தனது 12ம் வயதில் தூரின் மாநகரில் தொன் போஸ்கோ நடத்திய மாணவர் இல்லத்தில் சேர்ந்து அவருடைய வழிநடத்துதலில் புனிதராவதற்கான வழிமுறைகளைக் கற்றுக்கொண்டார். அவர் எப்போதும் சாந்தமும், மகிழ்ச்சியும், அமைதியும் உடையவராகக் காணப்பட்டார். படிப்பில் அறிவுக் கூர்மையுள்ளவராக இருந்தார். தனது நண்பர்களைப் பாவத்தில் விழாமல் கண்காணித்து அவர்களுக்கு மறைக்கல்வியையும் கற்றுக்கொடுத்தார். நோயாளிகளை அன்போடு கவனித்துக் கொண்டும், சண்டையிடுபவர்களிடையே சமாதானத் தூதுவராகவும் விளங்கினார். "எல்லோரும் புனிதராக வேண்டும் என்பது இறைவனது திருவுளம். புனிதராவது மிகவும் எளிது. புனிதருக்கு விண்ணகத்தில் ஒரு பெரும் பரிசுத் தயாராக உள்ளது", என்ற தொன் போஸ்கோவின் மறையுரை அவரை ஈர்த்தது. தனது வார்த்தையினாலும், வாழ்வினாலும் இன்முகத்துடன் கூடிய கடமையுணர்வினாலும் எல்லா இளைஞர்களையும் இறைவன்பால் ஈர்த்தார்.

"இளமையின் மகிழ்வால் உலகை வெல்வோம்" என்று மகிழ்விலும், புனிதத்திலும் வாழ்ந்த சாவியோ 1857ம் ஆண்டு மார்ச் 9ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை 11ம் பத்திநாதர் இவரை "மன

உறுதியில் பேராற்றல் வாய்ந்தவர்" (Little gaint of the spirit) என்று பாராட்டி புகழாரம் சூட்டினார். 1954ம் ஆண்டு ஜூன் 12ம் நாள் திருத்தந்தை 12ம் பத்திநாதர் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார். தூய்மைக்கும், பிறரன்புக்கும் எடுத்துக்காட்டாகவும், இளையோரின் பாதுகாவலராகவும் திருஅவை இவரை ஏற்படுத்தியுள்ளது.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் தம் வார்த்தையாலும், வாழ்வாலும், புனிதத்திற்கு முக்கியத்துவம் அளிக்க இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. சலேசிய ஆசிரியர்கள் தங்களுடைய அன்பினாலும், பொறுமையினாலும் இளைஞர்களைக் கவர்ந்து அன்பு காட்டி, மதித்து, அவர்களைப் புனிதப் பாதையில் வழிநடத்திச் செல்ல இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இன்றைய இளையோர் அனைவரும் அன்பினால், உறவின் உண்மை மதிப்பீடுகளை உணர்ந்து புனித சாவியோவைப் போல சீரியக் கோட்பாடுகளை நேரிய வழியில் பின்பற்ற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. இங்கு கூடியிருக்கும் நாங்கள் அனைவரும் "பாவம் செய்வதைவிட சாவதே மேல்" என்ற புனித சாவியோவின் பொன்மொழிகளை ஆழமாக உணர்ந்து, பாவ வழிகளைத் தவிர்த்துப் புண்ணியத்தில் உயர்ந்து வளர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 12.05.2019 உயிர்ப்புக் காலம் நான்காம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I. திப. 13: 14, 43-52 II. திவெ 7: 9.14-17 யோவா 10: 27-30

அன்பு இறைமக்களே, திருஅவையானது உயிர்ப்புக் காலத்தின் நான்காம் ஞாயிறைத் தியானித்து சிறப்பிக்க நம்மை அழைக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் பவுலும், பர்னபாவும் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்கும்பொழுது, இயேசு பிறந்த யூத சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் இதை எதிர்க்கின்றார்கள், ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். இதனைக் கண்ட பவுல், "ஆண்டவர் எங்களை உலகெங்கும் உள்ள அனைவருக்கும் நற்செய்தியை அறிவிக்கப் படைத்துள்ளார். யூதர்களாகிய நீங்கள் ஏற்கவில்லை என்றால் நாங்கள் புற இனத்தாருக்கு இந்நற்செய்தியை அறிவிப்போம் என்று பிறஇனத்து மக்களின் மீட்புக்கு நற்செய்தியை அறிவிக்கிறார். இரண்டாம் வாசகத்தில் எல்லா நாட்டினரையும், குலத்தினரையும், மொழியினரையும் சந்தித்த மக்களினங்கள் ஆண்டவரின் மீட்பு அனைவருக்கும் உரியது. அரியணையில் வீற்றிருக்கும் ஆண்டவரே இவர்களின் தலைவர், ஆயர், கடவுள் என்றும், நற்செய்தியில் நம் ஆண்டவராகிய இயேசு, "நானே நல்லாயன் என் ஆடுகள் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றன என்றும்,

அவரின் வார்த்தைக்கு யார் யாரெல்லாம் செவிசாய்க்கிறார்களோ அவர்கள் அனைவரும் தன் ஆடுகள் என்றும், அவற்றை நான் நல்வழியில் நடத்தி மீட்புக்கு அழைத்துச் செல்வேன்" என்றும் உறுதியளிக்கின்றார். நமது ஆயர் யார்? நாம் இயேசுவின் குரலுக்குச் செவி மடுக்கின்றோமா? என்று சிந்தித்து இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி வாழும் மக்களாக வாழ அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **திருஅவைக்காக:** உமது திருஅவையை வழிநடத்த நீர் தெரிந்துக்கொண்ட எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தாரைப் பேணிக்காத்து அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைத் திறம்பட எதிர்கொண்டு வெற்றிக் காணவும், திருஅவையின் மேன்மையையும் மாண்பையும் தொடர்ந்து பாதுகாக்கும் ஆற்றலைப் பெறவும் அவர்களை வழிநடத்த வேண்டுமென்று உயிர்த்த இயேசுவே உம்மை மன்றாடுகிறோம்.

2. **பங்குத்தந்தை / மக்களுக்காக:** எமது பங்குத் தந்தையின் உடல் உள்ள நலனைப் பாதுக்காத்து அவர் மேற்கொள்ளும் எல்லாச் செயல்பாடுகளையும் இறைவனின் மகிமைக்காகச் செய்யவும், அவர் எதிர்ப்பார்க்கின்ற நியாயமானத் தேவைகள் யாவும் நிறைவேறவும் உயிர்த்த இயேசுவே உம்மை மன்றாடுகிறோம்.

3. **இளையோருக்காக:** பரிவுள்ள இறைவா, இருபால் இளையோர் விசுவாச வாழ்வில் உறுதியாய் இருந்து, தங்களின் இலக்கை அடைய நீர் உதவி செய்யவும், கல்வியில் சிறந்து விளங்கி நல்ல மதிப்பெண்கள் பெற்று, அவர்கள் எதிர்பார்க்கின்ற உயர்க்கல்வியும், வேலை வாய்ப்பும் பெற்றுக் கிறிஸ்துவை வெளிப்படுத்தும் இளைஞனாய் இளம் பெண்ணாய் விளங்கிடவும் உயிர்த்த இயேசுவே உம்மை மன்றாடுகிறோம்.

4. **நாட்டு நலனுக்காக:** நீதியின் இறைவா, சமீப காலங்களாக எம் தேசத்தில் கொடுமைகளும், சீர்கேடுகளும், அநீதிகளும், உயிர் வதைகளும், அநியாயங்களும், நாளுக்குநாள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. இறைவா உமது மேலான கருணையால், இந்த இழிநிலை மாறி புதிய ஆட்சியமைந்து, நாடு அமைதியிலும், முன்னேற்றத்திலும் திகழ வரமருள உயிர்த்த இயேசுவே உம்மை மன்றாடுகிறோம்.

## 13.05.2019 புனித மரிய மசரெல்லோ திருப்பலி

**முன்னுரை**

சகோ. ரோஷன்

புனித மரிய மசரெல்லோ மே 19, 1837ம் ஆண்டு இத்தாலி நாட்டில் மொர்னேசே என்ற இடத்தில் பிறந்தார். இவர் இளமைப்பருவம் முதல் ஆழ்ந்த பக்தியிலும், அயராத உழைப்பிலும், நிறைவான மதிப்பீடுகளிலும், நடைமுறை செயல்பாட்டிலும் சிறந்து விளங்கினார். தனது 15ம் வயதில்

"அமல உற்பவ புதல்வியர்" குழுவில் சேர்ந்து ஏழை இளம் பெண்களுக்காக தனது சேவையைத் தொடங்கினார். "நிலையான அமைதியில் மகிழ்ச்சியுடன் இரு" என்ற கொள்கையைக் கொண்டிருந்த இவர் இளம் பெண்கள் கல்விப்பெற்று வாழ்வில் முன்னேற தன்னுடன் பணியாற்றிய சகோதரிகளுடன் அர்ப்பணத்துடனும், மகிழ்ச்சியுடனும் பணிபுரிந்தார்.

இறையழைப்பினை ஏற்று புனித தொன் போஸ்கோவுடன் இணைந்து சகாய அன்னையின் புதல்வியர்களின் சபையை 1872ல் நிறுவினார். இவர் 1881ம் ஆண்டு மே 14ம் நாள் நிசா மான்பெராத்தோ என்னும் இடத்தில் இவரது மண்ணக வாழ்வு நிறைவு பெற்றது. திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1951ம் ஆண்டு ஜூன் 24ம் நாள் புனித நிலைக்கு உயர்த்தினார். இவரின் வாழ்க்கை முறையைப் பின்பற்றி நாமும் நம்முடைய வாழ்வில் பிறருக்காக வாழும் வரம்வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் தலைவர்கள் அனைவரும் தலைவராம் கிறிஸ்துவைப் பின்பற்றி உண்மையும், எளிமையும் உள்ள ஊழியர்களாக வாழ வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. சகாய அன்னையின் புதல்வியர்கள் அனைவரும் புனித மரிய மசரெல்லோவின் முன்மாதிரியைப் பின்பற்றி அழைத்தலிலும், சேவையிலும் உண்மையுள்ளவர்களாய் திகழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இளம் பெண்கள் தங்கள் கடமைகளை மகிழ்வுடன் நிறைவேற்றவும், இறையழைத்தலுக்குச் செவிமடுப்போர் கிறிஸ்துவைப் பின்பற்றி வாழவும் முன்வர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. இங்கு கூடியுள்ள அனைவரும் தாயாம் மரிய மசரெல்லோவைப் போன்று தாழ்ச்சி, மனஉறுதி, மறைப்பரப்பு பணியார்வம் கொண்டவர்களாய் தங்கள் வாழ்வில் சிறந்து வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 14.05.2019 புனித மத்தியாஸ் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது இயேசுவின் திருத்தூதரான தூய மத்தியாஸின் விழாவைச் சிறப்பிக்கின்றது. மத்தியா என்பதற்கு "யாவேயின் கொடை" என்பது பொருள். இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்குப் பதிலாக ஒரு புதிய திருத்தூதரைத் தேர்வு செய்யும் முயற்சியில், ஏறக்குறைய 120 சகோதர சகோதரிகள் ஒரே இடத்தில் கூடியிருந்த நேரத்தில் பேதுரு அவர்கள் நடுவில் எழுந்து நின்று இயேசுவின் சீடர்களுள் யூதாசுக்குப் பதிலாகப் புதிய நபர் யாராக இருக்க வேண்டுமென்று கூறினார். "ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாய் விளங்க, அவர் நம்மிடையே செயல்பட்ட

காலத்தில் நம்மோடு இருந்த ஒருவரைச் சேர்த்துக் கொள்ள நாம் கூடிவர வேண்டியது தேவையாயிற்று. யோவான் திருமுழுக்குக் கொடுத்தக்காலம் முதல் ஆண்டவர் நம்மிடமிருந்து விண்ணேற்றமடைந்த நாள்வரை அவர் நம்மோடு இருந்திருக்க வேண்டும்" என்று கூறினார். அதன்படி யோசேப்பு என்பவரும் மத்தியாஸ் என்பவரும் முன்னிறுத்தப்பட்டார்கள். சீட்டுக் குலுக்கிப் போட்டதில் அவர்களுள் இறைவனின் திட்டப்படி மத்தியாஸ் 12வது திருத்தூதராகத் தேர்வானார்.

(இதை இன்றைய முதல் வாசகம் சான்றளிக்கிறது). காட்டு மிராண்டிகளுக்கு மத்தியில் நற்செய்தி போதித்துவந்த மத்தியா, தனது கண்கள் பறிக்கப்பட்டுப் பார்வையிழந்தார். இயேசுவின் அறிவுறுத்தலின்படி தூய அந்திரேயா அவரை மீட்டதாக "மத்தியா பணி" என்ற நூலில் தூய அந்திரேயா எழுதியுள்ளார். இவரது இறப்புக் குறித்து பல்வேறு தகவல்கள் நிலவுகின்றன. இருப்பினும் இவரது திருப்பண்டங்கள் டிரியர் நகரில் உள்ள ஆசீர்வாதப்பர் துறவு மடத்தில் வைக்கப்பட்டுள்ளன. எனவே இவரது வாழ்வை நாம் பார்க்கிறபோது, "மனிதர் தரும் வாய்ப்புகளைவிட இறைவன் கொடுக்கும் வாய்ப்புகள் ஆசீர்வாதமானவை" என்பது தெளிவாகிறது. அதுமட்டுமன்று, இன்றைய நற்செய்தியில், "நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்" என்றும் "நீங்கள் என்னைத் தேர்ந்துக் கொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்துக் கொண்டேன்" என்றும் நாம் வாசிக்கின்றோம். எனவே அன்புக்குரியவர்களே, அந்த ஆசீர்வாதமான வாய்ப்பிற்காகக் காத்திருப்பதைவிட அதைத் தேடி அடைய நமது வாழ்வைத் தகுதியாக்கிக் கொள்ள, நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ளத் தொடர்ந்து இப்புனிதரின் வழியாக இத்திருப்பலியில் மன்றாடி பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக்க, உம் வாக்கை அன்புடனும் தாழ்ச்சியுடனும் கேட்டுக் கீழ்ப்படியும் மக்களாக நாங்கள் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. மனிதரால் புறக்கணிக்கப்பட்ட இயேசுவே, உம்மை அறியாத மக்களால் நாங்கள் புறக்கணிக்கப்படும் போது அவர்களை வெறுக்காமல் அவர்களுக்காக மன்றாடும் மனதைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 16.05.2019 புனித லூயிஸ் ஓரியோனே திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித லூயிஸ் ஓரியோனே அவர்களின் விழாவைச் சிறப்பிக்கின்றோம். இத்தாலியில் பிறந்தவர் தனது 14ம் வயதில் தூரினில் தொன் போஸ்கோவின் ஆரட்டரியில் சேர்ந்தார். குருவாகத் தன்னை அர்ப்பணிக்க எண்ணிய லூயிஸ் முதலில் பிரான்சிஸ்கன் துறவற சபையில் சேர்ந்தார். ஆனால் தனது உடல்நிலை காரணங்களால் அந்தச் சபையில் இருந்து வெளியேற வேண்டியதானது. அச்சமயத்தில்தான் தொன் போஸ்கோவின் அரவணைப்பு இவருக்கு கிடைத்தது. சலேசிய குருமட வாழ்வைச் சுவைத்து வந்தவர், சலேசிய துறவியாகத் தன்னைத் தொடர்ந்து இருத்திக் கொள்ளும் எண்ணத்தை மாற்றி, அங்கிருந்தும் வெளியேறினார். பிறகு தனது சொந்த மறைமாவட்டமான தோர்தோனாவில் உள்ள குருமடத்தில் சேர்ந்து 1895ல் குருவானார். அதே நாளில் அவருடைய நண்பர்களும் துறவு வாழ்வை ஏற்க முன்வந்தனர். பின்னாளில் தொன் போஸ்கோவின் பணியில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தவர் என்ற வகையிலே, தன்னுடன் குருமாணவர்களையும் சில விருப்பமுள்ள குருக்களையும் சேர்த்துக்கொண்டு ஏழை இளையோர், ஆதரவில்லா முதியவர்கள் மற்றும் உடல்நலமில்லா மாற்றுத் திறனாளிகளுக்காகப் பணியாற்ற முடிவெடுத்தார்.

பல்வேறு இடங்களில் இவரது பணி வளர ஆரம்பித்தது. இதன் உச்சக்கட்டமாக இறைப்பராமரிப்பின் புதல்வர் சபை, அன்பின் மறைப்பரப்பு கன்னியர் சபை போன்ற துறவற சபைகளையும் ஏற்படுத்தி தனது பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அவர் கட்டியெழுப்பிய மரியன்னையின் பீடத்தின் வழியாகப் பெற்று இறைவனின் வழிகாட்டுதலை உணர்ந்தார். நமது நாட்டில் 2002 முதல் இவரது சபையினர் தங்கள் பணியினைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். மறைந்த திருத்தந்தை புனித இரண்டாம் யோவான், பவுல் அவர்களால், 1980ல் அருளாளராகவும் பிறகு 2004ல் இதே நாளில் புனிதராகவும் உயர்த்தப்பட்டார். இப்புனிதரின் வழியாக நமது அழைத்தலை (துறவறமோ / பொதுநிலையினரோ) உணர்ந்து இறைவனுக் கேற்ப பிறரன்புப் பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் ஞானத்தைப் பெற இத்திருப்பலியில் மன்றாடி பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, திருஅவையை வழிநடத்தும் தலைவர்கள் புனித லூயிஸ் போன்று தங்கள் சமூக, ஆன்மீகப் பணிகளில் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்கள் வாழ்வை முன்னேற்றிட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நன்மையின் நாயகனே இறைவா, எங்கள் வாழ்வில் நாங்கள் சந்திக்கும் துன்பப்படுவோரின் துயரையும், தனிமையில் ஏங்குவோரின் தனிமையையும் நீக்கவும், அன்புச் செய்யப்படாதவர்களை அன்புச் செய்யவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் இறைவா, வெறுப்புக்கும் வன்முறைக்கும் இலக்கானோர் தங்கள் வாழ்வில் உம்முடைய உடனிருப்பை உணரவும், உமது அன்னையின் பராமரிப்பை அனுபவிக்கவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 18.05.2019 புனித லெயனார்து முரியால்தோ திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலிப் புத்தகம்

புனித லெயனார்து முரியால்தோ 1828ம் ஆண்டு தூரின் நகரில் பிறந்தார். இவர் தனது குடும்பத்தினரிடமும், சவோனாவைச் சேர்ந்த ஸ்கொலாப்பியரிடமும் மிகச் சிறந்த கல்வியைப் பெற்றார். இறைவார்த்தை மற்றும் இறையியலின் நெறிமுறைகளை விடாமுயற்சியுடன் படித்து முடித்தப்பின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இளங்குருவாக இருந்தபோது மேய்ப்புப்பணி செய்யவும், சிறைப்பட்டிருக்கும் இளையோர் மறைக்கல்வியின் வழியாக நல்வாழ்வு பெறவும், மக்களுக்கு இறைவார்த்தையை எடுத்துரைக்கவும், இறைவார்த்தையை அச்சிட்டு விசுவாசத்தைப் பரப்பவும் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தார். இவ்வாறு இவர் தனது ஆன்மீக வாழ்வைச் செபத்தாலும், பணி வாழ்வாலும் எண்ணற்ற மேம்பாட்டுத் திட்டங்களைக் கொண்டு வாழ்ந்தார். தந்தை கஃபாசோ மற்றும் தொன் போஸ்கோவுடன் இணைந்து இவர் உழைத்ததால் தூரினிலுள்ள புனித அலோசியஸ் ஆரட்டரிக்கு இயக்குநராக அமர்த்தப்பட்டார்.

1873ம் ஆண்டு "தூரின் நகரத்து சமயப் பணி ஆர்வமுடைய புனித யோசேப்பின் சபையை" (Pious Truin Society of Saint Joseph) நிறுவினார். சிறிது காலத்திற்குப்பின் இச்சபை "புனித யோசேப்பின் சபை" (Congregation of Saint Joseph), என்றே அழைக்கப்பட்டது. இச்சபையின் வழியாக கிராமங்களிலும், தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் இளைஞர்களுக்குச் சிறந்ததொரு கல்விப் பணியையும், மேம்படுத்தும் பணியையும் செய்தார். புனித லெயனார்து, இளைஞர்களின்மீது கொண்ட அன்பினால் அவர்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்தார். பல்வேறு இன்னல்களுக்கிடையில் முப்பத்தி நான்கு ஆண்டுகள் ஆர்த்தியியனெல்லி என்ற கல்லூரியின் இயக்குநராகப் பொறுப்பேற்று கிறிஸ்துவக் கோட்பாடுகளிலும் தொழிற்சட்டத்துறையிலும் இளைஞர்களைப் பயிற்றுவித்து உருவாக்கினார். ஏழை அனாதை இளைஞர்களுக்குப் பொருத்தமான பாதுகாப்பாளர்களைச் சட்டப்படி பெற்றுத்தந்தார். மேலும் கத்தோலிக்கப் பணியாளர்களுக்குச் செயல் திட்டங்களையும், அமைப்புகளையும் உருவாக்கித் தந்தார். இவர் "அமைதியில் செயல்படு"

(Silent Action) என்ற விருதுவாக்கை ஏற்றவராய் அனைவரோடும் இனிமையாகப் பழகி உதவியும் செய்தார். 1887ம் ஆண்டு கொடிய நோயால் தாக்கப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்த இவர், தொன் போஸ்கோவின் இறையாசீரால் முழு குணம் பெற்று, பல்வேறு இன்னல்களுக்கிடையிலும், பின்விளைவுகளுக்கிடையிலும் அயராது உழைத்தார். இவர் 1900ம் ஆண்டு மார்ச் 30ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் இவரை 1963ம் ஆண்டு அருளாளர் நிலைக்கும், 1970ம் ஆண்டு மே 3ம் நாள் புனிதர் நிலைக்கும் உயர்த்தினார். இவரது சமூகப் பார்வையை நாமும் பெற்றிட அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் தங்களது திருத் தூதுப் பணியில் உண்மையுள்ளவர்களாக விளங்கவும் இறைமக்களை நிறையன்பில் வழிநடத்துவதில் சிறந்து விளங்கவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அரசியல், சமூக, பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும், சகோதரத்துவம், நீதி, நேர்மை ஆகியவற்றைக் கடைப்பிடித்து சிறந்த உலகினைக் கட்டியெழுப்ப வேண்டிய தாராள உள்ளத்தைப் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. திருப்பலியில் பங்குகொள்கின்ற நாங்கள், கொண்டாடும் மறை பொருள் நிகழ்ச்சி வழியாக புதுப்பிக்கப்பெற்று நம்பிக்கையிலும், அன்பிலும் உறுதியாக நிலைத்திருக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. அமைதியே உருவான இறைவா, துன்பத்தின் மறுபக்கமே இன்பம், துன்பங்கள்தான் உன்னதமான வாழ்வுக்கு இட்டுச்செல்லும் வழி என்பதை உணர்ந்து எமக்கு வரும் சோதனைகளை வெல்ல உம்மைப்போல தூய ஆவியாரின் துணையோடு அவைகளைச் சாதனையாக்கும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 19.05.2019 உயிர்ப்புக் காலம் ஐந்தாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. திப. 14: 21-27. II. திவெ. 21: 1-5 யோவா. 13: 31-35

உயிர்த்த ஆண்டவரின் சமாதானத்தைப் பெற்று திருப்பலிக் கொண்டாட்டத்தில் கலந்துக்கொள்ள வந்திருக்கும் அன்பு சகோதரிகளே, சகோதரர்களே, இன்று பாஸ்கா காலத்தின் 5ம் ஞாயிறைச் சிறப்பிக்கின்றோம். "இதோ கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது, அவர் அவர்கள் நடுவே குடியிருப்பார். அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பார்கள்" என்ற இறைவார்த்தைக்கேற்ப புதிய எருசலேம் என்னும் அன்புச் சமூகமாக நம் சமுதாயம் மாற பாடுபடுவோம். நமது அன்புச்

சமூகத்தை, அன்பியங்களின் நடுநாயகமாய் இருந்து வளர்த்தெடுக்க, இறையேசு கிறிஸ்து நம்மோடு பிரசன்னமாக இருக்க மன்றாடுவோம். இன்றைய நற்செய்தியில், "ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" என்னும் புதிய கட்டளையை ஆண்டவர் கொடுக்கிறார். ஒருவருக்கொருவர் அன்பு செய்து வாழும்போது புதிய எருசலேம் இந்த மண்ணகத்தில் நிறுவப்படும், நாம் கடவுளின் பிள்ளைகள். பிறர் பசியாய் இருக்கும்போது உணவளித்தும், பிறர் ஆடையின்றி, இருக்கும்போது ஆடைகொடுத்தும், நோயில் இருக்கும்போது ஆறுதல் அளித்தும் இயேசுவின் உண்மைச் சீடர்களாக இவ்வுலகில் வலம் வருவோம். இன்று அன்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் நம் பெற்றோர்களிடம், சிறுசிறுவார்த்தைகள் மூலம் அன்பைப் பரிமாறுவோம். இயேசுவின் உண்மைச் சீடர்களாக மாறுவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் நிறைவே இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் புதிய எருசலேமை இவ்வுலகில் நிறுவி, உம்மை அதன் நடுநாயகமாக வைத்து அவர்கள் உமது அன்புச்சீடர்களாக வலம் வர உம்மை மன்றாடுகிறோம்.
2. என் வாழ்வும் அன்புமாய் இருக்கும் ஆண்டவரே, எங்களை ஆளுகைச் செய்ய நீர் தேர்ந்தெடுத்திருக்கும் தலைவர்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் சுயநலம் மறந்து பொது நலன் கருதி மக்கள்மீது அன்புக்கொண்டு நல்லாட்சி நடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இயேசுவே அன்பின் ஊற்றே, நாங்கள் தேவாலயத்திற்கு மட்டும் செல்பவர்களாக இல்லாமல் தேவையில் இருக்கும் மக்களுக்கு அன்புப்பணி செய்து, அவர்களது வாழ்க்கையை வளப்படுத்துபவர்களாகவும் எங்களை மாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. உயிர்ப்பும் உயிரும் நானே என்றவரே, நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைகளிலும் இல்லங்களிலும் வாடிக்கொண்டிருக்கும் மக்களுக்காகச் செபித்து அவர்களுடைய நோய்களைப் போக்கி அவர்கள் எழுந்து நடமாட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.05.2019 காசியா நகர் புனித ரீத்தா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

அன்பிற்குரிய இறைமக்களே, இந்நாள் மிகப் புனிதமான நாள். காரணம் புனித ரீத்தா அம்மாள் உருவான தியாக நாள். ஒரு சிலரைத் தவிர பலருக்குத் தெரியாது திருமணமானவர்களும் புனிதர் புனிதைகளான வரலாறு. இதில் முக்கியமானவர்களில் இவரும் ஒருவர். புனித ரீத்தா

தாயின் பக்தியால் தூண்டப்பட்டு துறவு மேற்கொள்ள விரும்பினார். ஆனால் பெற்றோரைப் பராமரிக்க இருந்ததினால் திருமணம் செய்து கொண்டார். புனிதையின் மன்றாட்டினால் மனம் திரும்பினார், பவுலோ மனம்மாறிய காரணத்தால் அவரின் எதிரிகள் அவரைக் கொலைச் செய்தனர். ஜான், பவுல் என்ற இரு மகன்களும் தந்தையைப் போலவே மூர்க்கர்களாயினர். திருந்தவேண்டும், இல்லையேல் இறைவா நீர் அழைத்துக்கொள்ளும் என மிக உருக்கமாக தன் பிள்ளைகளுக்காக புனிதை மன்றாடினார்.

இவரின் செபத்தை இறைவன் கேட்டார். திருந்தாமல் பெருந்துன்பம் கொடுத்த இரு பிள்ளைகளையும் இறைவன் தந்தை இறந்த ஓராண்டுக்குள் அழைத்துக்கொண்டார். தனிமையான பிறகு செப தப அறமுயற்சிகளில் ஈடுபட்டு துறவறம் மேற்கொள்ள விரும்பினர். புனித திருமுழுக்கு யோவான், புனித அகுஸ்தின், புனித நிக்கோலாசு துணை வேண்டி இடைவிடாது செபித்தார். அதன் விளைவு பூட்டப்பட்டிருந்த மடத்தின் உள்ளேயிருந்த சிற்றாலயத்தில் மூன்று புனிதர்களும் இரவு இவரை அழைத்துச் சென்று உள்ளே விட்டனர். அதிகாலையில் அருட்சகோதரிகள் உள்ளே வந்து பார்த்து வியந்து கேட்டபோது புனிதை நடந்ததைக் கூற கன்னியரும் துறவறத்தாரும் ஏற்றுக்கொண்டனர். அன்று முதல் இறைவல்லமையால் இயலாததை கூட இறைவனிடம் பெற்றுத் தரும் வரம் பெற்றவராக வல்லமையோடு வாழ்ந்து தன் 76வயதில் இறைவனடி சேர்ந்தார். இன்றைய நற்செய்தி வாசகம், நமக்குக் கூறுவது: "இறைவனோடு இணைந்திருந்தால் மிகுந்த கனி தருவோம்". புனித ரீத்தம்மா வாழ்வு நமக்குப் பாடமாக அமையட்டும். இணைந்திருப்போம், செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. இறைவா, எங்கள் தாய் திருஅவையின் பணியாளர்களான திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் இறைவனோடு எப்போதும் இணைந்திருந்து மிகுந்த கனி தருபவர்களாக எத்துன்பத்திலும் செப, தவ, அறச் செயல்களைச் செய்பவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. தாயும் தந்தையுமான இறைவா, உலகிலுள்ள அனைத்து பெண்களுக்காக மன்றாடுகிறோம். குடும்பத்தில், அலுவலகத்தில், தொழிற்சாலைகளில் பணிபுரியும் இவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இதனால் தளர்ச்சியும் சோர்வும் ஏற்பட்டாலும் உம்மிடமிருந்து விலகாமல் தியாக உணர்வோடு பணிபுரிந்து வாழும் வரம் தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. பரிவிரக்கம் கொண்ட இறைவா, எம் இளையோரை உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். புனித ரீத்தாவின் முன்மாதிரியைப் பின்பற்றி, பிறருக்காக பொறுமையுடன் செபிக்கும் பரந்த மனதினைப் பெற்று வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 24.05.2019 கிறிஸ்தவர்களின் சகாய அன்னை திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

வாழ்வின் சிக்கல்களில் கிறிஸ்தவ மக்கள் சிக்கி, சிதைந்து, கலக்கமுற்ற நேரங்களிலும், தனது நம்பிக்கைப் பயணத்தில் சந்தித்த அனைத்து இன்னல்களின்போதும் சகாய அன்னையின் அருட்கர பாதுகாப்பைத் திருஅவை உணர்ந்தது. ஆதலால்தான் அன்னை மரியாளுக்கு "கிறிஸ்தவர்களின் சகாயி" என்ற சிறப்புப் பெயரும் வழங்கப்பட்டது. 1814ம் ஆண்டு மே 24ம் நாள் திருத்தந்தை ஏழாம் பத்திநாதர் சகாய அன்னையின் அருளால், சிறையிலிருந்து விடுதலைப் பெற்று உரோமை நகர் திரும்பிய அற்புதமான நாளினைத் திருஅவை கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் திருவிழாவாகத் தேர்ந்தெடுத்தது.

தொன் போஸ்கோவின் வாழ்விலும், பணியிலும், உண்மையாய் பங்கேற்கும் சலேசிய குடும்பத்தினர் அன்னை மரியின் உறுதுணையையும், வழிகாட்டுதலையும் முழுமையாய் ஏற்றுப் பணிபுரிகின்றனர். இதன் வழியாக மேலும் அதிகமாய் இறைவனுக்குத் தங்களை அர்ப்பணிக்கவும், இளையோருக்கு இறைவனின் அன்பை உணர்த்தும் சாட்சிகளாய் வாழவும் முற்படுகின்றனர். இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு (திருஅவை எண்.62) மரியாளைப்பற்றி அழகான கருத்தை இறைமக்களுக்கு உணர்த்துகிறது. "பல இன்னல் இக்கட்டுகளிடையே இன்னும் பயணம் செய்து கொண்டிருக்கும் தம் மகனின் சகோதரர் சகோதரிகள், மகிழ்ச்சி நிறை விண்ணகம் வந்து சேரும்வரை தாய்க்குரிய அன்போடு மரியன்னை காத்து வருகின்றார். எனவேதான், கன்னிமரியாள் "திருஅவையிலே பரிந்துரைப்பவர், துணை புரிபவர், உதவி அளிப்பவர்" எனப் பல சிறப்புப் பெயர்களால் போற்றப் பெறுகிறார்".

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, தூய திருஅவைக்காகவும், திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரின் தேவைகளுக்காகவும் சகாய அன்னையின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. எல்லாம் வல்ல இறைவா, வழித்தவறி நடப்போர் திருந்தவும், நிம்மதியற்று வாழ்வோர் நிம்மதி பெறவும், வறுமையுற்றோர் வளம் பெறவும் சகாய அன்னையின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. அனைத்திற்கும் ஆறுதலான இறைவா, நோயுற்றோர் நலம் பெறவும், அறுவை சிகிச்சை முதலிய மருத்துவ உதவிகளை நாடுவோர் சிறந்த பலனை அடையவும், மாணவ மாணவியர் தேர்ச்சி பெறவும், வணிகம், விவசாயம் செய்வோர் வெற்றி காணவும் சகாய அன்னையின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கத்தின் இறைவா, திருமணத்திற்காக ஆயத்தம் செய்பவர்களுக்குத் திருமணம் நல்ல முறையில் நடக்கவும், குழந்தைச் செல்வம் இல்லாதோரின் குறைகள் நீங்கவும், தாய்மை எய்தியவர்களுக்குச் சுகப்பிரசவம் ஏற்படவும் சகாய அன்னையின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
5. அன்பின் ஆண்டவரே, வீடற்றோருக்குத் தக்க இல்லம் அமையவும், குடும்பங்களில் சமாதானம் நிலவவும், கடன்களைத் தீர்க்க வழி பிறக்கவும் மற்றும் உமது குழந்தைகளாகிய எங்களுக்குத் தேவையான அனைத்தையும் அளித்து ஆசீர்வதிக்கவும் சகாய அன்னையின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 26.05.2019 உயிர்ப்புக் காலம் ஆறாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. திப. 15: 1-2, 22-29 II. திவெ. 21: 10-14, 22-23 யோவா 14: 23-29

இறையேசுவில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று உயிர்ப்புக்காலம் ஆறாவது வாரத்தில் இருக்கின்றோம். இன்று திருஅவை நமக்குத் தந்துள்ள மூன்று வாசகங்களும் தூய ஆவியாரின் செயல்பாடுகளை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. முதல் வாசகத்தில், "மீட்படைவதற்கு அவசியமானது விருத்தசேதனம் அல்ல, ஆவிக்குரிய வாழ்வே" என்பதைச் சங்கத் தீர்மானமாக தூய ஆவியாரும் சீடரும் வெளிப்படுத்துகிறார்கள். இரண்டாம் வாசகத்தில் தூய ஆவியார் மலரும் புதிய எருசலேம் நகர் காட்சியாக விளக்கப்படுகிறது. அங்கே கடவுளும் ஆண்டவருமான ஆட்டுக்குட்டியே அதன் கோவில். கடவுளின் மாட்சியே அதன் ஒளி என்று விளக்கப்படுகிறது. என்மீது அன்பு கொண்டவர் என் வார்த்தையைக் கடைப்பிடிப்பார். நாங்கள் அவரிடம் குடி கொள்வோம். என்மீது அன்பில்லாதவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பதில்லை. நற்செய்தியில், நாம் மீட்படைவதற்கு இயேசு செய்தவை கற்பித்தவை உடனிருக்கும். உலகம் தராத அமைதியை அவர் உங்களுக்குத் தருவார். இறைவார்த்தையைக் கடைப்பிடித்து வாழ ஆற்றல் தருவார். இயேசுவின் வார்த்தையைக் கடைப்பிடிப்போம். மூவொரு இறைவனை நமக்குள் குடிவைப்போம். கிறிஸ்துவின் ஆவியாரைக் கொண்டிராதவன் கிறிஸ்தவனல்லன் என்ற வார்த்தையை உணர்வுடன் ஏற்று, தூய ஆவியாரால் நிறைவுடன் வாழவும், உலகம் தராத அமைதியைப் பெறவும் இத்திருப்பலியில் நம்மையே ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனே இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் மக்களுக்கு தூய ஆவியாரின் வெளிப்பாடுகளைக் கற்றுத்தரும் சிறந்த போதகர்களாக விளங்கிட உம்மை மன்றாடுகிறோம்.

2. வழிநடத்தும் இறைவா, எம் நாட்டுத் தலைவர்களும் ஆட்சியாளர்களும் சாதி, மத, இன, மொழி பேதம் இன்றி மக்களைச் சமத்துவத்துடனும், மனித நேயத்துடனும் வழிநடத்திட அமைதியில் மக்கள் இன்புற்றிட உம்மை மன்றாடுகிறோம்.
3. அருள் பொழியும் இறைவா, இங்கு கூடி செபிக்கும் அனைத்து மக்களின், உள்ளங்களிலும் தூய ஆவியாரின் பிரசன்னம் நிறைவாய் குடிக்கொள்ளவும், நிலையான அமைதி அங்கு குடிக் கொள்ளவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. வாழ்வளிக்கும் இறைவா, எம் பங்கிலும், நாட்டிலும் உள்ள ஏழைகள், விதவைகள், கைவிடப்பட்டோர், முதியோர், நோயுற்றோர், அவநம்பிக்கையுடன் வாழ்வோர் அனைவரும் உமது இரக்கத்தினால் தூய ஆவியாரின் புதுப்பிறப்பும், விடுதலையும் பெற்றிட உம்மை மன்றாடுகிறோம்.

## 31.05.2019 புனித கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்தல் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. பத்மாவதி

அன்னை மரியாள் எலிசபெத்தைச் சந்தித்த நிகழ்வை நமது திருஅவை இன்று விழாவாக கொண்டாடுகின்றது. நமக்கு அன்னைமேல் உள்ள பற்று, அன்பு, அளவுகடந்த பாசம் இவை அனைத்துக்கும் மேலாக, நம் அன்னை நமது தேவைகளை நாம் கேட்காமலே செய்து தருபவள். நாம் துன்பத்தில் துயருறும்போது அரவணைப்பவள் நம் அன்னை மரியா. இன்றைய நற்செய்தி தேவையில் இருப்பவரை அன்னை தேடிச்சென்று உதவுவதை எடுத்துக் கூறுகிறது. எலிசபெத் கருவுற்றிருப்பதை வானதூதர் மூலம் அன்னை கேள்விப்பட்டு யூதேயாவில் மலைநாட்டிலுள்ள அயின்கேரெமிக்குச் சென்று முதிர்வயதினரான எலிசபெத்துக்குப் பணிவிடைப் புரிகிறார். மூன்று மாதகாலம் உடனிருந்து, உதவிகள் செய்து வீடு திரும்புகிறார் அன்னை மரியா. நமது சந்திப்பும், உடனிருப்பும் எப்படி இருக்கிறது? யாருடன் நட்பு கொள்கிறோம்? யாரைச் சந்திக்க ஆவல் கொள்கிறோம்? துன்பத்தில் வாடுபவர்களுக்கா, கைதூக்கிவிட எனக்கு யாருமில்லையே என ஏங்கித்தவிக்கும் ஏழைகளுக்கா? யாருக்கு நமது உதவிக்கரங்களை நீட்டுகின்றோம். சிந்திப்போம், செயல்படுவோம். நம் அன்னை மரியாளைப்போலவும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்றேன் என்ற அன்னை தெரேசாவைபோலவும் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் இறைவனை மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், இருபால் துறவறத்தார் அனைவரையும் உமது தூய ஆவியாரின் துணைக்கொண்டு ஒவ்வொருவரும் உம் வல்லமையோடு பணிபுரிந்திடவும், தீமைகள் அவர்களை அணுகவிடாது காத்திடவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எல்லாம் வல்ல இறைவா, இன்று கன்னிமரியா எலிசபெத்தைச் சந்தித்த விழாவைக் கொண்டாடும் நாங்கள் எம்மை முற்றும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். நாங்களும் அன்னை மரியாவின் வழியைப் பின்பற்றி பிறர்க்கு உதவும் மனங்கொண்டு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. எல்லாம் வல்ல இறைவா, எமது நாட்டை ஆளத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய தலைவர்களை ஆசீர்வதிக்கவும், அவர்கள் பதவி மோகத்தை விட்டுவிட்டு மக்களின் நலனில் அக்கறைக்கொண்டு அறநெறியில் நடந்து நீதியையும் அமைதியையும் வளமான வாழ்வையும் மக்களுக்கு அளித்து நல்லாட்சி புரிந்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## புனிதத்தில் வழிநடத்தும் தவமும், ஒறுத்தலும்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

இவர் பீடச் சிறுவர்களின் பாதுகாவலர். இளைஞர்களின் பாதுகாவலரான புனித தொன் போஸ்கோவின் புனிதமான மாணவன் புனித தோமினிக் சாவியோ, 1842 ஏப்ரல் 2ம் நாள் வட இத்தாலியில் முரியால்தோவில் சார்லஸ் சாவியோ, பிரிட்ஜித் என்போரின் மகனாகப் பிறந்தார். மூத்தவர் இறந்ததால் இளைய மகனாகிய இவர்மேல் அதிகமான, அளவு கடந்த அன்பைப் பெற்றோர் பொழிந்தனர். கிறிஸ்துவக் கடமைகளைத் தாயிடமிருந்தும், மரியன்னை பக்தியைப் பங்கு குருவிடமிருந்தும் கற்றுத் தெளிந்தார் சாவியோ. கடும் பனிப்பொழியும் அதிகாலையில் எழுந்து தந்தையானவர் வயலுக்குச் செல்ல, ஐந்து வயது சாவியோ ஆன்ம வயலாம் கோவிலுக்குச் செல்வார். கோயில் கதவு திறக்க கால தாமதம் ஆனாலும், கதவு திறக்கும் வரை குளிரில் நடுங்கியவாறு கதவருகில் அமர்ந்திருப்பார். அந்த இளம் வயதிலேயே பக்திப் பரவசம் ஆவார்.

சாவியோ...... திருப்பீட வணக்கம் பெற்ற புனிதர்களுள் இவரே இளையவர். வேத சாட்சிகளைக் காணும்பொழுது, இவரைவிட சிறிய வயதுடையவர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக குழந்தை இயேசுவுக்காக இரத்தத்தைச் சிந்திய மாசற்ற குழந்தைகள்: 12 வயது நிரம்பிய மரிய கொரற்றி. ஆனால் இரத்தம் சிந்தாத புனிதரான புனித தோமினிக் சாவியோ இறக்கும்போது அவருக்கு வயது 14. பிறந்த அன்றே திருமுழுக்குப் பெற்ற சாவியோ உரிய பருவத்தில் தகுந்த தயாரிப்புடன் நற்கருணை உட்கொண்டார். நற்கருணை உட்கொண்டதன் நினைவாக சில தீர்மானங்களை, விருதுவாக்குகளை மேற்கொண்டார். நான் அடிக்கடி ஒப்புரவு அருளடையாளத்தைப் பயன்படுத்தி என் ஆன்ம குருவானவர் எனக்கு உத்தரவு கொடுக்கும்போதெல்லாம் நற்கருணை உட்கொள்வேன்.

- கடன் திருநாளை பக்தியுடன் அனுசரிப்பேன்
- "பாவம் செய்வதைவிடச் சாவேன்"
- "பாவம் செய்வதைவிடச் சாவேன்" என்னும் இச்சிறுவாக்கியம் எத்தனையோ மறையுண்மைகளில் விளக்கப்பட்டு, எண்ணில்லாத இளைஞர்களும் புனிதத் தன்மை எய்துவதற்கு உதவியாக இருந்து வருகிறது.

வாய் வார்த்தையாய் மட்டும் இல்லாமல், அவர் ஏற்ற விருதுவாக்கை வாழ்வாக்கிட தவறவில்லை. ஒருமுறை சக மாணவர்களுடன் குளிக்கச் சென்ற சாவியோ அவர்கள் வாயிலிருந்து கெட்ட வார்த்தைகள் சரளமாக வெளிவந்ததைக் கண்டு வெறுத்துப்போனார். நாம் வளர்ந்த பிள்ளைகள், குழந்தைகள் அல்ல, இவ்வாறு பேசுவதால் ஒன்றும் கெட்டுப்போகவில்லை என்று ஒருவன் கூற, "ஆம் குழந்தைகள் அல்ல, சரிதான். அதுபோல் கொழுத்த பன்றிகளுமில்லை. உங்களின் கெட்ட சொற்கள் எனக்குப் பிடிக்கவில்லை என்று கோபத்துடன் குளியலைப் பாதியிலேயே முடித்துக கொண்டு வீட்டிற்குத் திரும்பினார். தாய் சாவியோவின் செயலைக்கண்டு, "பாவம் செய்வதைவிட சாவதே மேல்" என்ற தன் விருதுவாக்கின் வழிதனில் தன் மகன் செல்வதைக் கண்டு மகிழ்ந்தாள். இதேபோல் மதிய உணவு உண்ண மறுத்தார். காரணம் கேட்டதற்கு மிருகங்களைவிடக் கேவலமானவர்கள் போல் செபம் செய்யாமல் உணவு உண்பர்களுடன் சேர்ந்து, உணவுண்ண எனக்கு விருப்பம் இல்லை என சட்டென்று பதிலளித்தார்.

"சாவியோ என்ற வார்த்தைக்கு "அறிவுள்ளவன்" என்பது பொருள். இந்தப் பெயர் அவருக்கு முற்றும் பொருந்தியதாக இருந்தது. அவர் தனது செயல்களிலும், படிப்பிலும், பக்தியிலும், தன் நண்பர்களோடு உரையாடுவதிலும் இன்னும் மற்றெல்லா காரியங்களிலும் அப்பெயர் தனக்கு எவ்வளவு பொருத்தமுடையது என எண்பித்தார். படிப்பில் சிறந்த மாணவராகத் திகழ்ந்த தோமினிக் மேல் படிப்புக்காக புனித தொன் போஸ்கோ நடத்திவந்த இல்லத்திற்கு அனுப்பும் விதமாக பங்குத்தந்தை புனித தொன் போஸ்கோவை தோமினிக் சாவியோ சந்திக்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தார். சந்திப்பிற்குப் பிறகு "தந்தையே என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? மேல்படிப்பிற்கு என்னைத் தூரின் பட்டிணத்திற்கு அழைத்துச் செல்வீர்களா? என தோமினிக் கேட்டார். அதற்கு புனித தொன் போஸ்கோ "நீ ஒரு நேர்த்தியான துணி என்றே நினைக்கிறேன்" என்றார். உடனே தோமினிக், "நான் ஒரு துணியா? இத்துணி எதற்கு உதவும்?" எனக்கேட்டார். அதற்கு போஸ்கோ "நம் ஆண்டவருக்கு ஓர் அழகிய ஆடைத் தைத்துக்கொள்ளலாமே" என்றார். உடனே தோமினிக் "மிகவும் மகிழ்ச்சி தந்தையே. நான் துணியானால் நீங்கள் தையல்காரராய் இருங்கள். என்னை உங்களோடு அழைத்துக் கொண்டு போய் என்னைக் கொண்டு ஆண்டவருக்கு நேர்த்தியான ஆடையைத் தைத்துக்கொடுங்கள்" என்றார்.

ஆம்... அவரே ஆண்டவருக்கு ஒரு அழகான ஆடையானார். ஆண்டவரை மகிமைப்படுத்தினார் தனது புனிதத் தன்மையினால். "தோமினிக் என்ற ஓர் இளைஞர் தமது திருமுழுக்கு நாளன்று பெற்றுக்கொண்ட புனிதத்தைப் பழுதின்றி காப்பாற்றத்தெரிந்து கொண்டவர். இவர் உண்மையிலேயே ஒரு புனிதர்" என்று புனிதர்பட்டம் சூட்டிய நாளில் திருத்தந்தை 10ம் பத்திநாதர் குறிப்பிட்டார். "தூய்மை, பக்தி, ஆன்ம வேட்கை இம்மூன்றினின்று அடைந்த ஆற்றல், இவரது கிறிஸ்தவ வாழ்வுக்கு ஊற்றுக் கண்ணாக அமைந்தது" என்று திருத்தந்தை 11ம் பத்திநாதர் குறிப்பிடுகிறார். தோமினிக் புனிதத் தன்மை அடைவதற்கு, இறையருளுக்குப் பிறகு, "ஒவ்வொருவரும் புனிதராக முடியும்" என புனித தொன் போஸ்கோ ஆற்றிய மறையுரையே காரணம். முதலாவது நாம் புனிதராக வேண்டியது இறைவனின் திருவுளம். இரண்டாவது புனிதராவது என்பது கடினமானதல்ல. மூன்றாவது, புனிதருக்கு விண்ணுலகில் பெரியதோர் பரிசு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பன ஆகும். இந்த மூன்று கருத்துக்களும் அவருடைய மனதில் ஆழமாய் பதிந்தன.

தன்னடக்கத்தின் மூலமாகவும், ஒறுத்தல்கள், விரதம், கடின உடல் உபாதைகள் இவற்றை மேற்கொண்டு புனித நிலையை விரைவில் அடைய முயற்சியை மேற்கொண்டார். விளைவு, அவரை நோய்ப்பற்றிக்கொண்டது. அவர்தாமே, ஒப்புரவு அருளடையாளத்தையும், நற்கருணையையும் பெற்றுக் கொண்டவராய் 1857 மார்ச் 9ல் அனைவருக்கும் விடையளித்தவராய் வான்வீட்டை அடைந்தார். புதினைந்து வயதிலேயே புனிதத்தின் உச்சியை அடைந்த தோமினிக் சாவியோவிற்கு திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1950 மார்ச், 5 அன்று அருளாளர் பட்டமும், 1954, ஜூன் 12 அன்று புனிதர் பட்டமும் வழங்கினார். சின்னஞ்சிறு வயது, சிறந்த புனிதர், பக்தி வாழ்வின் மாதிரி. இன்றைய இளைஞர்கள் இவரின் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மிகவும் குறிப்பாக, தீய சக்திகள் காட்டுத் தீயைப்போல பரவிக்கொண்டிருக்கும் காலக்கட்டத்தில் புனிதத்தை இளம் உள்ளங்களிலிருந்து வேரறுப்பது மட்டுமன்று, நஞ்சையும் புகுத்திக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் சாவியோவின் புனித வாழ்க்கை நம் இளைஞர்களுக்கு அறைகூவலாக அமையட்டும்.

## புனித மரிய டோமினிக்கா மசரெல்லோ - கடந்து வந்த பாதை

திருமதி. டிலைலா சேவியர்

தொன் போஸ்கோவைப் புனிதராய் கண்ட இவர், அவர் வழியில் இளம் பெண்களின் மீட்புக்காக புதிய பாதையைத் துவக்கியவர்தான் புனித மரிய மசரெல்லோ. இவரது வாழ்வு சிறார்களுக்கும், இளையோர்களுக்கும் ஓர் ஏற்றிய தீபம். கல்விப் பணியாற்றுபவர்களுக்கும், சமூகப் பணியாற்றுபவர்களுக்கும் ஒளிவிளக்கு. இவர் 1837ம் ஆண்டு மே திங்கள் 9ம் நாள் ஜோசப் கல்கானோ என்ற தம்பதியரின் தலைமகளாகப் பிறந்தார். பெற்றோரின் துணையால் இறையனுபவம் பெற, அவர் வளரும்போது இறையருளும் அவரில் வளர்ந்தது.

தன்னுடைய குடும்பத்தினரோடு இணைந்து, குடும்ப முன்னேற்றத்திற்காக இப்புனிதை திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்யச் சென்றார். திராட்சைத் தோட்டத்தில் இவர் காட்டும் கடும் உழைப்பை யாராலும் மிஞ்சவோ, வெல்லவோ முடியாது. இருப்பினும் ஒருமுறை திராட்சைக் கொடிகளை ஏற்றி கட்ட வேண்டிய அவசியம் இருந்தும் அவற்றை வெட்டி வீழ்த்தினார். பின்னர் துயரம் தாளாது தன் ஆன்ம குருவான தொன்பெஸ்தரீனோவிடம் "தான் செய்த தவற்றிக்கான மன்னிப்பை வேண்டினார். இதை இவர் உள்ளூர வெறுத்தாலும் மன்னிப்பு பெறுவது இறையருளைப் பெற்றுத்தரும் ஓர் அடையாளம் என்பதை நன்கு அறிந்திருந்தார். இவ்வருள் அடையாளத்தின் வழியாக தன்னை வெல்லவும் உறுதி பூண்டார். குருவானவர் இடும் கட்டளைகளுக்கு அடிப்பணிந்தார். இதன் வழியாக இறைவனுக்கு தன்னையே அர்ப்பணிக்க முயன்றார். காலம் செல்லச்செல்ல தன்னிடமுள்ள கோபம், பிடிவாதம், சிடுசிடுப்பு போன்றவைகளை இரைறயருளின் வழியாய் பெற்று, இறை அனுபவத்தில் நாளும் வளர்ந்தார்.

சிறுவயதிலிருந்தே தான் பெற்ற இறையனுபவத்தின் முதிர்ச்சியால் நற்கருணையில் வீற்றிருக்கும் உண்மை இயேசுவிற்காகப் பெரிதும் ஏங்கினார். சிலுவையில் அறையுண்ட இயேசுவை நினைத்து தான் அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்தையும் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காகத் தாழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். தவக்காலங்களில் செபம் செய்வதற்கென்றே தன் நேரத்தை முழுவதுமாக செலவிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நான், எனது என்ற குறுகிய வட்டத்தில் வாழும் அன்றைய சமுதாயத்தில் தன்னையே மறந்து பிறரை நினைத்து வாழ்ந்தார். இப்புனிதருடன்இவரது நட்பில் இணைந்து பெட்ரோனில்லா மசரெல்லோவும், தையற் கலையினைக்கற்று, யாரும் இல்லாத குழந்தைகளுக்கு இதன் வழியாக உதவி செய்து, இறுதியில் தையல் கூடத்தையே அநாதைகள் வாழும் இடமாக 1863ம் ஆண்டு மாற்றியமைத்தார். பண்ணைகளில் வேலை செய்யும் பெண்களுக்கும், தையற்கூடங்களில் பணிபுரியும் பெண்களுக்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் இனிமையாகப் பொழுதுபோக வழிவகுத்துக் கொடுத்தார்.

இதன் விளைவாக 1862ல் தையல் வகுப்பு, ஆரட்டரி, தங்கும் இடம், தொடங்கப்பட்டன. 1864ல் முதல் முறையாக புனித தொன் போஸ்கோவை சந்தித்தார். ஏழைப்பெண்களுக்குக் கல்விப் புகட்டுவதுப் பற்றி தொன் போஸ்கோ தொன்லேமோனிடம் உத்தரவுப் பெற்று தொன் பெஸ்தரீனோவால் அளிக்கப்பட்ட இல்லத்தில் இருவரும் தங்கினர். தொன் போஸ்கோ மோர்னேசே சென்று மரியின் புதல்வியர் சபையினருடன் இருந்து அவர்களின் பணியினைக் கண்டார். இதைப்பற்றி 9ம் பத்திநாதரிடமும் பேசினார். தொன் போஸ்கோ தந்த ஒழுங்குமுறைகளை உறுதியாகக் கடைப்பிடித்த இவர்களுக்கு ஆகஸ்ட் 5ம் நாளன்று 11 நபர்கள் துறவற

ஆடைப்பெற்றனர். சலேசிய சபையுடன் இச்சபை (FMA) இணைந்தது. தொன் போஸ்தரீனோ மரணத்திற்குப்பின் ஜூன் 15ல் இப்புனிதை சபையின் முதல் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அனைவரையும் எளிதில் தன் பக்கம் ஈர்க்கும் இயல்பான தன்மையைப் பெற்றிருந்தார். புனித மரிய மசரெல்லோ இவர் கல்வி கற்கும் வாய்ப்பை பெற்றதில்லை. எனினும், ஆன்மாக்களின் இயல்பைக் கண்டறியும் அறிவைப் பெற்றிருந்தார். 1881ம் ஆண்டு இப்புனிதையைப் புதிய பலவீனங்கள் ஆட்கொண்டன. இதனைக்கண்ட இவரது இல்லத்தில் உள்ளவர்கள் சோகத்தில் ஆழ்ந்தனர். அச்சமயத்தில் தொன்போஸ்கோ அங்கே வருகைப் புரிந்தார். அவரிடம் சகோதரி ஜோஸ்பின் "உங்கள் செபத்தினால் மரிய மசரெல்லோவின் முடிவை தவிர்க்கக் கூடாதா?" என்று கேட்டார். தொன் போஸ்கோ அச்சகோதரியிடம் "இப்பலிப்பொருள் இறைவனுக்கே மிகவும் உகந்தது" என்று கூறினார். கடுமையான நுரையீரல் வீக்க நோயால் புனித மசரெல்லோ துன்பப்பட்டார். இவரின் இறுதி நாட்களை அறிந்து கொண்ட இவர், மரியன்னையை தன்னுடைய மனதில் நினைத்துக்கொண்டார். சொற்கள் சிறிது சிறிதாக சக்தியை இழந்தன.

நாளை கிறிஸ்துவர்களின் சகாய அன்னையின் நவநாள் தொடங்குகிறது. இயேசுவின் பாடுகளைப்பற்றி பாடுங்கள், மரியன்னை இயேசுவின் பாடுகளில் பங்கெடுத்ததை நினைத்து அவரின் வியாகுலங்களைப் போற்றிப் பாடுங்கள் என்று எஞ்சியிருந்த வலிமையோடு கூறினார். பின் மரியன்னையின் பாடலைப் பாடியபடியே மே மாதம் 14 அன்று இறைவனடி சேர்ந்தார். இறைவார்த்தையின் வழியாய் வரும் ஏவுதலைப்பெற்று தன் சாட்சிய வாழ்வு மூலம் "ஆன்மாக்களை மீட்பதில் ஆவல் கொண்டு அப்பணிக்காக முழுமையாகத் தன்னை அர்ப்பணிப்பதில்தான் இறையன்பு நிறைவடைவதை இப்புனிதையின் வாழ்க்கைச் சரித்திரம் நமக்கு எடுத்துரைக்கின்றது. அன்பு செய்யுங்கள், ஒற்றுமையாய் இருங்கள், உலகைக் கைவிட்டு சபையினுள் நுழைந்தீர்கள். உள்ளேயே வேறொரு உலகை கட்டிவிடாதீர்கள்" மரியன்னைமீது ஆழ்ந்த நம்பிக்கைக் கொள், உன் தேவைகள் அனைத்திலும் அவள் உனக்கு துணை நிற்பார்.

## விடுமுறை விவிலியப் பள்ளி - ஒரு கண்ணோட்டம்

திரு. பி. விக்டர்

### விடுமுறை விவிலியப் பள்ளி (VBS) என்றால் என்ன?

இதற்கான பதில் சுருக்கமாகச் சொல்வதென்றால், கோடை விடுமுறை நாட்களில் பள்ளி விடுமுறையில் இருக்கும் சிறுவர், சிறுமியருக்கும் இளையோருக்கும் பாடல்கள், விளையாட்டுகள், நடனங்கள், நாடகங்கள், விவிலிய விளக்கங்கள் வழியாக "கற்றலின் இனிமை" முறையில்

திருவிவிலியத்தைக் கற்றுக்கொடுக்கும் ஒரு அமைப்பே விடுமுறை விவிலியப் பள்ளியாகும். கோடை விடுமுறையில் சிறுவர், சிறுமியர்கள் இயேசுவைத் தேடி வரவும், விவிலியம் பற்றிய அறிவும் தெளிவும் பெற்று இறைவார்த்தையின் வழியாய் வாழவும் பயிற்றுவிக்கும் திட்டமே "விடுமுறை விவிலியப் பள்ளி" திட்டமாகும்.

**தோற்றமும் வளர்ச்சியும்**

விடுமுறை விவிலியப் பள்ளி என்பது 1890ல் அமெரிக்க நாட்டிலுள்ள நியுயார்க் நகரில் முதன்முதலாக ஒரு பள்ளி ஆசிரியையால் தொடங்கப்பட்டது. பள்ளியில் குழந்தைகளுக்கு விவிலியம் கற்பிக்க நேரம் போதவில்லை என்பதற்காக கோடை விடுமுறை நாட்களில் நான்கு வாரங்களில் நடக்கும் வகுப்பாக இது தொடங்கப்பட்டது. முதல் வகுப்பில் நாற்பது குழந்தைகள் பயின்றனர். அடுத்த சில ஆண்டுகளில் ஒரு சில புதிய இடங்களில் இப்பள்ளியானது விரிவடைந்து, பின்னர் 1922ம் ஆண்டில் "பாப்டிஸ்ட் மிஷனரி சொசைட்டி" என்ற அமைப்பினர் விவிலிய விடுமுறைப் பள்ளியை உலகறியச் செய்தனர். அவர்களுடைய பணித்தளங்களில் இப்பள்ளி தொடங்கப்பட்டு வேகமாக வளர்ந்தது. இந்தியாவில் விடுமுறை விவிலியப் பள்ளியானது மேரி ஹாமில்டன் என்பவர் வழியாகவும் அவரது கணவர் வழியாகவும் தமிழ்நாட்டில் உள்ள கோவில்பட்டி என்கிற சிறிய ஊரில் முதன்முதலாகத் துவங்கப்பட்டது. தென் தமிழகத்தில் இப்பள்ளிக்கு வரவேற்பு மிகுந்திருந்ததால் தமிழக கத்தோலிக்க திருஅவையும் இப்பள்ளியை தங்களது மறைமாவட்டங்களில் தொடங்க ஆரம்பித்தது. 1980களில் தமிழகத்தில் உள்ள அனைத்து மறைமாவட்டங்களிலும் இப்பள்ளியானது விரிந்து பரந்தது.

**விடுமுறை விவிலியப் பள்ளியின் நோக்கம் என்ன?**

கோடை விடுமுறையைப் பயன்படுத்தி, வாழ்க்கைக்குப் பயன்தரும் முறையில் நமது சிறுவர், சிறுமியருக்கு விவிலியத்தை அறிமுகம் செய்வதே விடுமுறை விவிலியப் பள்ளியின் முதன்மை நோக்கமாகும். "இயேசு வளர வளர ஞானத்திலும் அறிவிலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்ததைப்போல (லூக். 2:52) நமது குழந்தைகளுக்கு திருவிவிலியததை நேரடியாக அறிமுகம் செய்து, திருவிவிலியத்தைத் திறந்து வாசிக்கவும், சிந்திக்கவும், செபிக்கவும் அதன்படி வாழவும் பயிற்சி அளிப்பதே இதன் நோக்கமாகும். மாணவ மாணவியர் ஒன்றுகூடி ஆடிப்பாடி, விளையாடி, கலைவழியாகவும், பாடங்கள், பாடல்கள், பயிற்சிகள் வழியாகவும் திருவிவிலியத்திலிருந்து கடவுளின் அன்பைக் கற்றறிந்து அவரை ஆராதிக்கவும், மனித மாண்பைக் கண்டறிந்து மதித்துப் பேணி வாழவும் கற்றுக்கொள்ளச் செய்வதே இதன் நோக்கமாகும்.

**விடுமுறை விவிலியப் பள்ளி** (VBS) **இயங்கும் முறை**

UKG வகுப்பு முதல் பதினொன்றாம் வகுப்பு வரையுள்ள மாணவ மாணவியரின் வயது, உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, அறிவு வளர்ச்சி, சமூக நிலை ஆகியவற்றிக்கேற்ப மாணவ மாணவியர் நான்கு குழுக்களாய் பிரிக்கப்படுவர்.

**முதல் குழு:** ஆர்வ நிலையினர் (UKG to IInd Std)

**இரண்டாம் குழு:** தொடக்க நிலையினர் (III to V Std)

**மூன்றாம் குழு:** இளநிலையினர் (VI to VIII Std)

**நான்காம் குழு:** முதுநிலையினர் (IX to XI Std)

மேலே குறிப்பிட்ட குழுவினருக்கேற்ப ஒவ்வொரு குழுவுக்கும் ஆசிரியர் கையேடு, மாணவர் பயிற்சி ஏடு என்று (VBS) பாடநூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மூன்று ஆண்டுகளில் முழு விவிலியத்தையும் கற்றுக் கொள்ளும் விதத்தில் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழக விவிலியப் பணிக்குழு இதற்கான விரிவான முன்னேற்பாடுகளைச் செய்துள்ளது. ஒரு வகுப்பை எப்படி, எவ்வளவு நேரம் நடத்த வேண்டும்? என்கிற அட்டவணை வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் எப்படி பாடம் நடத்த வேண்டும்? என்று விரிவான கையேடு ஒன்று உண்டு. ஒவ்வொரு குழுவுக்கும் தனித்தனி ஆசிரியர்கள் கையேடு உண்டு. இக்கையேட்டில் வகுப்பு நடக்கும் நாட்களுக்கான இறைவார்த்தை குறிப்பு, போதனாமுறை, கலைவழிப் பயிற்சி முறைகள் பல இடம் பெற்றுள்ளன. வகுப்புகளைச் சுவையுடன் நடத்துவதற்கு இக்கையேடு மிகவும் பயனுள்ளதாகும். ஆசிரியர் கையேட்டையொட்டி ஒவ்வொரு நாளுக்கும் மாணவருக்கேற்ற பல்வேறு பயிற்சிகள் இந்த ஏட்டில் உண்டு. இந்த பயிற்சியேட்டை உபயோகப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் பல்வேறு திறன்களை வெளிக்கொணர முடிகிறது. ஒன்பது நாள்கள் வகுப்பு என்றும், பத்தாவது நாள் தாங்கள் கற்றதை வெளிப்படுத்தும். கலைநிகழ்ச்சியின் நாளாகவும் சிறப்பித்து நிறைவு செய்யப்படுகிறது.

VBS**க்கான துணைக் கருவிகள்**

விடுமுறை விவிலியப் பள்ளியில் பயன்படுத்தப்படும் துணைக் கருவிகள் மாணவர்களின் உற்சாக பங்கெடுப்புக்கு உதவி செய்வதாய் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஒரு புனிதரது வரலாறு தொடர்கதையாக மாணவர்களுக்கு ஒன்பது நாட்களும் சொல்லப்படும். அப்புனிதரின் படத்தை ஒட்டி அதை வருகைப்பதிவாகவும் பயன்படுத்தலாம். குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்த அந்த ஆண்டின் தலைப்பையொட்டி தொப்பிகள் வழங்கி உற்சாகப்படுத்தலாம்.

**பாடல் ஏடு:** விவிலியக் கருத்துக்களை உள்ளடக்கிய VBS பாடல்களை அச்சடித்து பாடல் ஏடுகளை வழங்கி பாடிப்பழக உதவி செய்யலாம்.

ஆண்டின் மையக் கருத்தையும், விவிலியப் பாடங்களையும் அடிப்படையாகக் கொண்ட இனிய, எளிய, குழந்தைகள் பாடக்கூடிய பாடல்கள் அடங்கிய ஒலி,ஒளிக் குறுந்தகடு ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுகிறது.

- பொம்மைகளைப் பயன்படுத்தி விவிலிய நிகழ்வுகளை பொம்மலாட்ட நிகழ்ச்சி மூலம் வெளிப்படுத்தலாம். குழந்தைகளுக்கு அதில் அதிக ஆர்வமுண்டு.

- படங்களை உபயோகித்து விவிலிய நிகழ்வுகளை, கதைகளைச் சொல்ல வைக்கலாம்.

- விவிலிய விளையாட்டுகள் மிக முக்கியமான அங்கமாகும். எந்த விளையாட்டையும் விவிலிய நிகழ்வுகளையும் இணைத்து விளையாடும் பொழுது விளையாடியவாறு விவிலியத்தைக் கற்றுக்கொள்கின்றனர். இதற்காகவே திருவிவிலிய விளையாட்டுகள் அடங்கிய புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**செய்ய வேண்டிய முன் தயாரிப்புகள்**

பங்கு மையத்திலும் கிளைத்தளங்கள் அனைத்திலும் VBS நடத்தப்பட வேண்டும். சிறுபிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள் (லூக் 18:16) என்கிறார் இயேசு. எனவே சிறுபிள்ளைகள் இருக்கும் இடங்கள் அனைத்திலும் VBS நடத்தப்பட வேண்டும். இதற்கான ஆசிரியர்களைத் தயாரிக்க வேண்டும். தன்னார்வமுள்ள பள்ளி ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், படித்த படித்துக் கொண்டிருக்கும் இளைஞர் இளம் பெண்கள், பக்த சபையினர், குடும்ப பெண்கள் இப்படி யார் வேண்டுமானாலும் VBS ஆசிரியராக பணிபுரியலாம். இவர்கள் செபத்துடன் கூடிவந்து முன்னதாகவே பங்குத்தந்தை மற்றும் பங்கு பேரவையுடன் கலந்து பேசி அவர்களின் ஒத்துழைப்புடன் நன்கு திட்டமிடல் வேண்டும்.

VBS வகுப்புக்கு வரவிருக்கும் மாணவ மாணவியரின் பட்டியல் முன்னதாகவே தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும். VBS வகுப்புகளுக்கு சில வாரங்களுக்கு முன்பே VBS பற்றி விளம்பரம் செய்ய வேண்டும். VBS வகுப்புகளுக்குப் பிள்ளைகளை அனுப்பிவைக்க பெற்றோரை ஊக்குவித்தல் வேண்டும். தேவையான துணைக்கருவிகள் ஆசிரியர் கையேடுகள், மாணவர் பயிற்சி ஏடுகள் இவற்றைத் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும். வகுப்பு நாட்களில் மாணவர்களுக்குச் சிற்றுண்டி வழங்கி உற்சாகப்படுத்த வேண்டும். பங்குத்தந்தையின் உதவியுடன் இதற்கான நன்கொடையாளர்களைத் தேர்வுச் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். VBS நாட்களில் ஒருநாள் இன்பச் சுற்றுலா அழைத்துச்சென்று பிள்ளைகளை உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்தலாம். VBS ஆசிரியர் அனைவருக்கும் மாநில அளவில் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக்கு ஆசிரியர்களை அனுப்பிவைத்து சிறந்த ஆசிரியர்களை உருவாக்கலாம்.

**விடுமுறை விவிலியப் பள்ளியின் VBS பயன்கள் என்ன?**

இறைவார்த்தையைச் சிறார்களுக்கு அறிவித்து, அவற்றை உள்ளத்தில் பதியச் செய்கிறது.

1. இயேசுவே நமது வழியும், வாழ்வும், உண்மையும் என்பதை சிறுவயது முதலே ஏற்றுக்கொள்ளவும், இறைவார்த்தை ஒளியில் நல்ல பல தீர்மானங்களை எடுத்து வாழ்வில் கடைப்பிடிக்கவும் VBS கற்றுக் கொடுக்கிறது.
2. ஆடல், பாடல், கதை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுகள் மூலம் திருவிவிலியத்தைக் கற்பதால் இறையாட்சியின் உண்மைகளும் மதிப்பீடுகளும் மிக எளிதாக மனதில் பதிந்து வாழ்வில் நற்கனி விளைய VBS உதவுகிறது.
3. ஆறுதலும் விடுதலையும் வாழ்வும் தரும் இறைவார்த்தைகளை மனனம் செய்வது வெற்றியுள்ள செபத்திற்கும் கிறிஸ்தவ சாட்சிய வாழ்வுக்கும் பயிற்சியாய் அமைகிறது.
4. மறைக்கல்வி வகுப்புகளிலும் அருளடையாள வாழ்விலும் நற்செய்தி அறிவிப்புப் பணியிலும் ஆர்வமுடன் பங்குபெற VBS ஊக்குவிக்கிறது.
5. VBS ஆசிரியர்களாகப் பணியாற்றும் இளைஞர் இளம் பெண்கள், ஆசிரியர்களின் திறமைகளையும், தலைமைத்துவப் பண்பையும் VBS வளரச் செய்கிறது.
6. பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகள் வழியாக நற்செய்தி அறிவு அளிக்கப்படுகிறது.
7. இவ்வாறு VBS பன்முகப் பயன் கொண்டதாக விளங்குகிறது.

விடுமுறை விவிலியப் பள்ளியில் நாமும் பங்கெடுப்போம், நமது குழந்தைகளையும் பங்குபெற வைப்போம்.

## திருச்சபைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.,

**மறைக்கல்வியுரை-உணவைப்போல் மன்னிப்பும் தினசரி தேவை**

நமக்கு உணவு தேவைப்படுவது போல், மன்னிப்பும் தேவைப்படுகின்றது. ஆம், தினமும் தேவைப்படுகின்றது. மத்தேயு நற்செய்தியின் கிரேக்க மூலப்படிவத்தில், "குற்றங்கள்" என பயன்படுத்தப்பட்ட வார்த்தை, "கடன்பட்டிருத்தல்" என்ற பொருளைக் கொண்டதாக இருந்தது. ஆகவே, கிறிஸ்தவர்கள், "எங்கள் கடனை மன்னியும்" என செபிக்கத் துவங்கினர். நாம் உண்மையிலேயே இறைவனுக்குக் கடன்பட்டுள்ளோம். ஏனெனில் நம்மிடம் இருப்பவை அனைத்தும் இறைவனிடமிருந்து கொடையாக வந்தவையே. நம் வாழ்வு, நம் பெற்றோர், நண்பர்கள், நம்மைச்சுற்றியுள்ள இயற்கை என, அனைத்தும், அவர் கொடையே. நம்மால் அன்பு செய்ய

முடிகிறது என்றால், நாம் முதலில் அன்பு செய்யப்பட்டுள்ளோம் என்பதே காரணம். அதுபோல், மன்னிப்பைப் பெற்றுள்ளதால்தான், நம்மால் மன்னிக்க முடிகிறது. நாம் பிறப்பதற்கு முன்னிருந்தே நம்மை அன்பு கூரும் அந்த அன்புப் பிணைப்பை, இறையன்பின் நற்பேறான பிரசன்னத்தை, எப்படி நம்மால் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியும்? கடவுள் நம்மை அன்புக் கூர்வதுபோல், நம்மில் எவரும் அவரை அன்புக்கூர முடியாது. இதை உணர்ந்து கொள்ள, இயேசுவின் சிலுவையை உற்றுநோக்கினாலே போதும். ஆகவே, நம்மிடையே வாழும் புனிதர்கள்கூட, என்றும் இறைவனுக்கு கடன்பட்டவர்களாக வாழ்கிறார்கள் என்பதை உணர்ந்து செபிப்போம். இறைத்தந்தையே எம்மீது இரங்கியருளும்.

## 80 வயதான அருள்சகோதரி உருவாக்கும் சிலுவைப்பாதை

ஏப்ரல் 19, புனித வெள்ளியன்று உரோம் நகரின் கொலோசெயம் திடலில் நடைபெறவிருக்கும் சிலுவைப்பாதை சிந்தனைகளை உருவாக்கும் பொறுப்பை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கொன்சொலாத்தா (Consolata) துறவுசபையைச்சேர்ந்த அருள்சகோதரி யூஜேனியா பொனெத்தி (Eugenia Bonetti) அவர்களிடம் ஒப்படைத்துள்ளார் என்று வத்திக்கான் செய்தித்துறை தலைவர், அலெஸ் சாந்த்ரோஜிசோத்தி அவர்கள் அறிவித்துள்ளார். மனித வர்க்கத்தினால் கொடுமைகளுக்குள்ளாகும் மக்களின் வேதனைகள், இவ்வாண்டின் சிலுவைப்பாதை முயற்சியின் மையப் பொருளாக அமையும் என்று ஜிசோத்தி அவர்கள் தெரிவித்தார். 80 வயதான அருள்சகோதரி பொனெத்தி அவர்கள், இத்தாலியிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பணியாற்றும் அருட்சகோதரிகளிடம், மனித வர்க்கத்தின் கொடுமைகளை பல ஆண்டுகளாக உணர்த்தி வருகிறார் என்றும், இதன் விளைவாக, அவர், "இனி ஒருபோதும் அடிமைகள் கிடையாது" என்று பொருள்படும் 'Slaves no More" என்ற கழகத்தை உருவாக்கினார் என்றும் CNS கத்தோலிக்கச் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

## ஹாங்காங்கில், உயிர்ப்புப் பெருவிழாவில், 2800 திருமுழுக்குகள்

இவ்வாண்டு உயிர்ப்பு ஞாயிறன்று, ஹாங்காங் தலத் திருஅவையில் 2800க்கும் அதிகமானோர் திருமுழுக்குப்பெற்று, கத்தோலிக்கத் திருஅவையில் இணைக்கப்பெறுவர் என்றும், இவர்களில் பெரும்பாலானோர் வயதுக்கு வந்தவர்கள் என்றும் ஆசிய செய்தி கூறியுள்ளது. உயிர்ப்பு ஞாயிறன்று திருமுழுக்குப் பெறுவோரில் பலர், அலுவலங்களில் பணியாற்றுவோர் என்றும், இவர்கள் தங்கள் நண்பர்கள், உறவினர்கள், அல்லது வலைத்தளங்கள் வழியே, கத்தோலிக்கத் திருமறையைக் குறித்து அறிந்து ஆர்வம் கொண்டு, திருஅவையை நாடிவந்துள்ளனர் என்றும், அருள்பணி Pasini அவர்கள் எடுத்துரைத்தார். திருமுழுக்குப் பெற விழைவோரில் பலர், ஏற்கெனவே ஹாங்காங் பங்குத்தளங்களில்

தன்னார்வத் தொண்டர்களாகப் பணியாற்றியுள்ளனர் என்றும், இவர்களது வருகையால் தலத்திருச்சபை இன்னும் உற்சாகத்துடன் செயலாற்ற முடியும் என்றும் திருத்தந்தை மறைப்பரப்புப் பணியாளர்களான PIME சபையின் தலைவர், அருள்பணி Giorgio Pasini அவர்கள் ஆசிய செய்தியில் கூறினார். மாசிடோனியா உட்பட, 34 மொழிகளில் வத்திக்கான் செய்திகள் தமிழ் உட்பட, உலகின் 33 மொழிகளில் தினசரி செய்திகளை வழங்கிவரும் திருப்பீடத்தின் செய்தித்துறை, தற்போது மாசிடோனியா மொழியுடன் 34ஆக எண்ணிக்கையில் உயர்ந்துள்ளது.

**மக்கள் தொகையும், மனித முன்னேற்றமும் குறித்து திருப்பீடம்**

உலகில் அதிக வருமானம் பெறும் 20 விழுக்காட்டினர், உலகின் 86 விழுக்காடு வளங்களைப் பயன்படுத்துகையில், மிக வறிய 20 விழுக்காட்டினர், 1.3 விழுக்காடு வளங்களையே பயன்படுத்துகின்றனர்.

**மதச் சுதந்திரத்தைக் காப்பதில் திருப்பீடத்தின் அர்ப்பணம்**

"மனித குடும்பத்தின் பொதுவான நன்மைக்கு ஆபத்து" என்ற தலைப்பில் கர்தினால் பரோலின் அவர்கள் உரை வழங்கிய வேளையில், "ஒருவர் விரும்பித் தெரிவுச் செய்யும் மத நம்பிக்கை, அவரது வாழ்வின் சமுதாய, அரசியல் தளங்களில் தாக்கங்களை உருவாக்குகிறது" என்று எடுத்துரைத்தார். மதநம்பிக்கைக் கொண்டோருக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளை அறிந்துக்கொள்ளவும், அவற்றைத் தடுக்க, பன்னாட்டளவில் கூட்டுறவு முயற்சிகள் மேற்கொள்ளவும் நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை, கர்தினால் பரோலின் அவர்கள் தன் உரையில் வலியுறுத்தினார். மதநம்பிக்கைக் கொண்டோருக்கு எதிராக, குறிப்பாக, சிறுபான்மை மதத்ததைச் சார்ந்தோருக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் குறித்த விவரங்கள், வெளிவராமல் தடுக்கப்படுவது நாம் சந்திக்கும் பேராபத்து என்று கர்தினால் பரோலின் அவர்கள் எடுத்துரைத்தார்.

## சுடர் வாசகர் போட்டி - 58 சரியான விடைகள்

1. நான்கு சிறகுகளை உடைய சிங்கம்
2. பேராயர் புனித ஆஸ்கர் அர்னுல்/போ ரொமேரோ
3. அந்தோனியோ கிஸ்லியரி
4. திரிதெந்தின் சங்கம்
5. பர்னபாவோடும், பவுலோடும்
6. 1. திருஒளி வழிபாடு, 2. பாஸ்கா பவனியும் புகழுரையும், 3. இறைவாக்கு வழிபாடு, 4. திருமுழுக்கு வழிபாடு, 5. நற்கருணை வழிபாடு
7. கிராக்கொ மறைமாவட்டம்
8. புனித பிரான்சிஸ் அசிசி
9. வேதியப் பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்படாத உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்துவதின் வழியாகவே காப்பாற்ற முடியும்.
10. பக்தி
11. தொநூ. 3:19
12. புனித மாற்கு
13. இயேசு மீண்டும் வருவார்
14. இயேசுவுக்கு இறை இயல்பு, மனித இயல்பு இரண்டும் ஒரே நேரத்தில் இருந்தது என்பது கத்தோலிக்க நம்பிக்கை. கிறிஸ்துவிடம் ஒரே இயல்பு தான் இருந்தது என்று பலர் போதித்தனர்.
15. பவோலா நகர் புனித பிரான்சிஸ்

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

R. Magdalene, Pallikonda.

Sr. Kulandai Teresa, Tuticorin.

M. Saralamary, Pallikonda.

## சுடர் வாசகர் போட்டி - 59

1. மருந்தகப் பணி, இறக்கும் நிலையிலிருப்போர், கம்பளி செய்வோரின் பாதுகாவலர் யார்?
2. மத்தியா என்ற வார்த்தையின் பொருள் என்ன?
3. புனித லூயிஸ் ஓரியோனேவின் விருதுவாக்கு என்ன?
4. புனித மரிய மசரெல்லோவின் ஆன்ம குரு யார்?
5. அருட்சகோதரி யூஜேனியா பொனெத்தி எந்த சபையை சார்ந்தவர்? அவரின் வயது என்ன?
6. பூட்டப்பட்டிருந்த ஆலத்திற்குள் புனித ரீட்டாவை கரம்பிடித்து அழைத்துச் சென்ற மூன்று புனிதர்கள் யார்?
7. இயேசுவும் மரியன்னையும் என் நண்பர்கள் கூறியது யார்?
8. தொழிலாளர் தின விழாவை எந்த ஆண்டு? யார் உருவாக்கினார்?
9. இறை பராமரிப்பின் சபையை ஏற்படுத்தியவர் யார்?
10. புனித மரிய மசரெல்லோ எந்த பாடலை பாடியபடி இறைவனடி சேர்ந்தார்?
11. திருப்பீடத்தின் செய்தித்துறை தற்போது எத்தனை மொழிகளில் செய்தியை வழங்கி வருகின்றது?
12. "இப்பலிப் பொருள் இறைவனுக்கே மிகவும் உகந்தது" கூறியது யார்?
13. புனித யோசேப்பின் சபையை நிறுவியவர் யார்?
14. "மன உறுதியில் பேராற்றல் வாய்ந்தவர்" யார் யாரைப் பற்றி கூறியது?
15. திருத்தூதர் பிலிப்பு எந்த வயதில் எப்படி இறந்தார்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை மே 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

ஜஸ்டின் மறைசாட்சி
ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழா
அருளாளர் ஸ்ட்வான் சாந்தூர்
தூய ஆவி பெருவிழா
பர்னபா திருத்தூதர்
அருளாளர் பிரான்சிஸ் கெசியான்டு கோ
பதுவை நகர் புனித அந்தோணியார்
மூவொரு கடவுள் பெருவிழா
திருவுடல் திருஇரத்தப் பெருவிழா
திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா
அலெக்சாந்திரியா புனித சிரில்
திரு இருதயப் பெருவிழா
புனிதர்கள் பேதுரு, பவுல் திருத்தூதர் பெருவிழா

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

திருஇருதயம் தரும் பாதுகாப்பு
இன்று தூய ஆவியும் நானும்
புனித ஜோசப் கப்பாசோ வாழ்வு தரும் பாடம்
திருச்சபை செய்திகள்

**தீபகச் சுடர்**

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:......................................
முகவரி:....................................
...........................................
...........................................
...........................................

## மே மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | பு | தொழிலாளர் புனித யோசேப்பு | திப. 5: 17-26 | யோவா 3: 16-21 |
| 2 | வி | புனித அத்தனாசியுஸ் | திப 5: 27-33 | யோவா 3: 31-36 |
| 3 | வெ | புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு | 1கொரி 15: 1-8 | யோவா 14: 6-14 |
| 4 | ச | புனித ப்ளோரியன் | திப 6: 1-7 | யோவா 6: 16-21 |
| 5 | ஞா | **உயிர்ப்புக் காலம் மூன்றாம் ஞாயிறு** | I. திப 5: 27-32. 40-41<br>II. திவெ 5 11-14 | யோவா 21: 1-19 |
| 6 | தி | புனித தோமினிக் சாவியோ | திப 6: 8-15 | யோவா 6: 22-29 |
| 7 | செ | பெவெர்லி நகர் புனித ஜான் | திப 7: 51-8:1 | யோவா 6: 30-35 |
| 8 | பு | புனித மரிய மகதலேனாள் | திப 8 1-8 | யோவா 6: 35-40 |
| 9 | வி | | திப 8: 26-40 | யோவா 6: 44-51 |
| 10 | வெ | புனித தமியான் | திப 9: 1-20 | யோவா 6: 52-59 |
| 11 | ச | புனித இஞ்ஞாசியார் | திப 9: 31-42 | யோவா 6: 60-69 |
| 12 | ஞா | **உயிர்ப்புக் காலம் நான்காம் ஞாயிறு** | I. திப 13: 14. 43-52<br>II. திவெ 7: 9. 14-17 | யோவா 10: 27-30 |
| 13 | தி | புனித கன்னி மரியா | திப 11: 1-18 | யோவா 10: 1-10 |
| 14 | செ | புனித மத்தியா | திப 1: 15-17,20-26 | யோவா 15: 9-17 |
| 15 | பு | புனித இசிதோர் விவசாயிகளின் பாதுகாவலர் | திப 12: 24-13:5 | யோவா 12: 44-50 |
| 16 | வி | புனித சைமன் ஸ்டாக் | திப 13: 13-25 | யோவா 13: 16-20 |
| 17 | வெ | புனித பாஸ்கல் | திப 13: 26-33 | யோவா 14: 1-6 |
| 18 | ச | புனித முதலாம் ஜான் | திப 13: 44-52 | யோவா 14: 7-14 |
| 19 | ஞா | **உயிர்ப்புக் காலம் ஐந்தாம் ஞாயிறு** | I. திப 14: 21-27<br>II. திவெ 2: 1-5 | யோவா 13: 31-35 |
| 20 | தி | புனித பெர்னார்தின் | திப 14: 5-18 | யோவா 14: 21-26 |
| 21 | செ | புனிதர்கள் கிறிஸ்டோபர் மகல்லானஸ் | திப 14: 19-28 | யோவா 14:27-31 |
| 22 | பு | புனித ரீத்தா | திப 15: 1-6 | யோவா15: 1-8 |
| 23 | வி | ரோஸி நகர் புனித ஜான் பேப்டிஸ்ட் | திப 15: 7-21 | யோவா 15: 9-11 |
| 24 | வெ | சகாய மாதா | திப 15: 22-31 | யோவா 15: 12-17 |
| 25 | ச | புனித ஏழாம் கிரகோரி | திப 16: 1-10 | யோவா 15: 18-21 |
| 26 | ஞா | **உயிர்ப்புக் காலம் ஆறாம் ஞாயிறு** | I. திப 15: 1-2, 22-29<br>II. திவெ 21:10-14, 22-23 | யோவா 14: 23-29 |
| 27 | தி | புனித அகுஸ்தீன் | திப 16: 11-15 | யோவா 15: 26-16:4 |
| 28 | செ | புனித ஜெர்மானூஸ் | திப 16: 22-34 | யோவா 16: 5-11 |
| 29 | பு | புனித சிரில் | திப 17:15,22-18:1 | யோவா 16: 12-15 |
| 30 | வி | புனித ஜோன் ஆப் ஆர்க் | திப 18:1-8 | யோவா 16: 16-20 |
| 31 | வெ | **புனித கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்தல்** | செப் 3:14-18 | லூக் 1: 39-56 |